SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 செப்டம்பர் 2026 ₹25
Volume : 47 Issue : 06
www.samarasam.net

வெற்றித் தமிழகம் சாத்தியமா?

மதங்களைக் கடந்த மாற்றுச் சிகிச்சை

முடக்கப்பட்ட நாடாளுமன்றம்




## காவிரியும் கடைமடை விவசாயியும்..!



தமிழ்நாட்டின் உரையாடல் கலாச்சாரம்

## எங்கே செல்கிறது?

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

## இஸ்லாம் கூறும் நல்ல நண்பன் யார்?

அவனைப் பார்த்தால் அல்லாஹ்வின் நினைவு வரும்
அவனுடன் பேசினால் ஈமான் அதிகரிக்கும்
அவனுடன் அமர்ந்தால் அறிவு வளரும்
அவனுடைய செயல்கள் மறுமை நாளை நினைவுபடுத்தும்

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611

## உள்ளே...





● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

**6** வெற்றித் தமிழகம் சாத்தியமா? ● தலையங்கம்

**8** காவிரியும் கடைமடை விவசாயியும்..! ● கப்ளிசேட்



**13** பெற்றோரைப் போற்றும் பிள்ளைகளாக..!
● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது



**14** எளிமையான திருமணம் ● H. அப்துர் ரகீப்

**16** தமிழ்நாட்டின் உரையாடல் கலாச்சாரம் எங்கே செல்கிறது?
● ஐ.ஜலாலுதீன்



**21** மது, போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!
● மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ

**28** முடக்கப்பட்ட நாடாளுமன்றம் ● சேயன் இப்ராகிம்




**31** நல்லறங்களும் சமுதாயத்தின் தற்போதைய நிலைமையும்
● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி




**34** திமுகவின் விதை நெல் நிலைக்குமா? ● புதுமடம் ஜாபர் அலீ

**36** நாட்டைச் சீரழிக்கும் போதைப் பொருள் பயன்பாடு ● அ.மெஹ்ராஜ்

**40** சிறுகதை : ஒரு மணி அடித்தால்..! ● B. ரியாஸ் அகமது

**44** நாவல் : அக்கரைப் பச்சை ● ஜரினா ஜமால்



**48** சிறார் உலகம் : நட்புக்காக நட்பு ● கவிஞர் காசீம்

**50** கடைசிப் பக்கம் : மதங்களைக் கடந்த மாற்றுச் சிகிச்சை ● ரியாஸ்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள்,
விளம்பரக் கட்டணங்களை அனுப்ப
QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

### யான் பெற்ற இன்பம்




72 வயதாகிய நான் சமரசம் இதழை முழுவதும் வாசித்து பயனடைகிறேன். நான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்பதற்காக என் அருகிலுள்ள வீட்டாருக்கும் சமரசத்தை வாசிக்கக் கொடுக்கின்றேன். திருக்குர்ஆன் விளக்கமும், நபிமொழியும் ஆழமான கருத்துகளைக் கொண்டிருக்கின்றது. சமரசத்தின் அனைத்துக் கட்டுரைகளும் மிகவும் சிறப்பு.

– க.பாஸ்கரன், வாணியம்பாடி

### உரத்துப் பேசிய தலையங்கம்

நீதியின் குரல் வெல்லட்டும் தலையங்கம் அருமை. மக்கள் சக்தி வெல்லும் என்பதை காலம் விரைவில் உணர்த்தும். இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு என்றுமே அலாதியானது, பிரமிப்பைத் தரக்கூடியது. விடுதலை தினத்திற்கு மட்டுமல்லாமல் அவ்வப்போது இதுபோன்ற கட்டுரைகளை வெளியிடுவது மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிவருவதற்கு உதவியாக இருக்கும்.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

### திருமறை வசனங்களைப் பரவலாக்குவோம்

வேதனையின் வெளிப்பாடு கோபமாக மாறி எல்லையை மீறும் போது சிலருக்கு வழிகள் தெரிவதில்லை. பலருக்கு வலிகள் குறைவதில்லை. கோபம் தவிர் கட்டுரை சிறப்பு. திருமறை வசனங்கள் ஒவ்வொரு திருமண மண்டபத்திலும் பளிச்சிட வேண்டும். திருமணப் பத்திரிகையிலும் அச்சிட வேண்டும். விஸ்வரூபம் எடுத்துள்ள நீட் தேர்வுப் போராட்டத்திற்கு அரசு தடை போடுவது சரிதானா?

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

### நீதியின் குரல்

‘நீதியின் குரல் வெல்லட்டும்’ தலையங்கம் நீதியின் குரலாகவே ஒலித்திருக்கிறது. நீதிபதி சூர்யகாந்தின் கூற்று மிகவும் வருந்தத்தக்கது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாராமுகமான பதிலைத் தருவது மனித நேயத்திற்கு எதிரானது.

நீட் வினாத்தாள் கசிவு, ஊழலின் ஊற்றுக்கண்ணாகும். போராட்டக் களத்தில் துணை இராணுவம் களமிறங்கியது விரும்பத்தக்கது அல்ல. ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வரை போராட்டம் தொடர வேண்டும்.

– கவிஞர் காசீம், கடையநல்லூர்

### பசு மரத்து ஆணி போல..!

இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு குறித்த H.அப்துர் ரகீப் அவர்களின் உரை தெள்ளத் தெளிவான நீரோட்டமாக இருந்தது. தமிழ் மக்களுக்கு செய்திகள் போய் சேர வேண்டும். ஒவ்வொரு வார்த்தையும் பசு மரத்தில் ஆணி அடித்தார் போல் இறங்கியது. அப்துர் ரகீப் அவர்களின் உண்மையான கருத்துகளை எல்லா நண்பர்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். நீதியின் குரல் வெல்லட்டும் தலையங்கம் உண்மையான வார்த்தைகள்.

– T.M. பெரோஸ்கான், விருத்தாசலம்

### நினைவு கூரப்படவேண்டிய ஆளுமை

1857இல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு 51 ஆண்டுகளுக்கு முன்பே 1806இல் அந்நிய ஆட்சியை எதிர்த்து சிப்பாய்களின் புரட்சி வேலூரில் நடத்தப்பட்டுள்ளது என்பதை கட்டுரை ஆசிரியர் விவரமாக அறியத் தந்தமைக்கு நன்றி. சமரசம் ஆசிரியர் H.அப்துர் ரகீப் அவர்களின் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பற்றிய எழுத்தோவியம் அவருடைய ஆற்றலையும் இந்தியர்கள் என்றுமே மறக்கக் கூடாத அபார சாதனைகளையும் மிகச் சிறப்பாக நினைவு கூர்ந்தது. நாட்டின் எதிர்காலத்திற்கும், கல்விக்கும் திட்டங்கள் தீட்டி அவை இன்றளவும் கோலோச்சுவதற்கு அடித்தளமிட்ட ஆசாத்தை நினைவு கூரவேண்டும். மது உள்ளே போனால் மதி

வெளியே போகும். எல்லாப் பாவங்களுக்கும் மூலம் மதுவே. கஞ்சா, மது, போதையை ஒழித்திட முழு மூச்சுடன் அரசு சளைக்காமல் செயல்பட வேண்டும்.

– ப. சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

### உள்ளம் அமைதி பெற..!

இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்து நடத்திய வீரம் செறிந்த வேலூர் புரட்சி குறித்த முழு விவரங் களையும் அறியத்தந்த சேயன் இப்ராகிமுக்கு நன்றி. இரவுத் தொழுகை மனதுக்கு நிம்மதி யையும், அமைதியையும் அளிக்கும் என்ற நடுப்பக்க நபிமொழியின் விளக்கத்தை நாமும் அனுபவிக்க இரவுத் தொழுகையில் ஈடு பட வேண்டும். தர்மேந்திர பிரதான் பதவி விலகியது மாணவர் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியே. கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் இளவல்களுக்கு நல்வாழ்த்துகள்.

– S. அஜித்தா, M. லைலாம்மா,
S. மகுதனன், தேனி

### மெட்டெடுத்துப் பாடலாம்

நீட் தேர்வு ரத்துதான் நிரந்தரத்தீர்வு என்பதை வலியுறுத்தியுள்ளீர்கள். உண்மை தான். மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் போதையை ஒழிக்க முடியாது. பெண்களும் குடிக்கத் தொடங்கியிருப்பது வேதனை யளிக்கும் செய்தி. மதுவால் கொலைகளும், தற்கொலைகளும் பெருகுகின்றன. கவிஞர் காசீமின் கவிதை அருமை. அதை கல்விச் சாலைகளில் மெட்டெடுத்துப் பாடலாம். கோபத்தைத் தவிர்க்கக் கூறிய ஆலோச னைகள் மிகச் சிறப்பு. மெரினா மஹால் சிறுகதையில் வரும் கரீமின் செயல்பாடு மிகச் சரியானது. இன்றைய காலகட்டம் அப்படித் தான் இருக்கிறது.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

### இந்தியாவிற்குப் பொருந்தாத சட்டம்

வணக்க வழிபாடுகளை எல்லாம் தாண்டி, இறைவன் ஒவ்வொரு வினாடியும் நம்மைக் கண்காணிக்கின்றான் என்கிற உணர்வை ஊட்டும் முராக்கபா என்னும் பயிற்சி, அதன் பலன்களை ஷெய்க் அவர்கள் நன்கு பதிய வைத்திருக்கிறார்.

UCC இந்தியாவுக்குச் சற்றும் பொருந் தாது என்பதை பல்வேறு கூறுகளின் அடிப் படையில் கட்டுரையாசிரியர் நன்கு விளக்கி உள்ளார். அவற்றை வாசிப்பவர்கள் ஆழ்ந்து சிந்தித்தால் UCC வேண்டாம் என்றே முடிவுக்கு வருவதுடன், RSS இதன் மீது ஏன் வரிந்து கட்டு கிறது என்பதையும் விளங்கிக் கொள்வார்கள். கோபத்தை அடக்க அண்ணல் நபி(ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறைகளே சிறந்தவை.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன்சத்திரம்

### அருமையான தாலாட்டு

சிறார் உலகம் பகுதியில் கவிஞர் காசீமின் கண்மணியே கண்ணுறங்கு கவிதை தாலாட்டு அருமை.

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

### பாதுகாக்க வேண்டிய இதழ்

ஆகஸ்ட் 1-15 இதழில் சேயன் இப்ராகிம் எழுதிய விடுதலை தின சிறப் புக் கட்டுரை வேலூர் புரட்சி 1806 மிகச் சிறப்பு. இந்தக்கால எழுத்தாளர்கள் அதிலும் குறிப்பாக இளைஞர்கள் இதுகுறித்த விவரங் களை நன்றாகத் தெரிந்து கொள்வது மிக மிக அவசியம். பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய இதழ்.

– தொலைப்பேசி மீரான், மின்னஞ்சலில்..!

### அபாரமான அட்டைப்படம்

ஆகஸ்ட் இதழின் அட்டைப் படம் அபாரம். இந்தியாவின் 80ஆவது விடுதலை தினத்தைக் கொண்டாடுகின்ற நேரத்தில் இந்திய விடுதலைக்கு முன்னோடியாக இருந்த அன்றைய வேலூர்புரட்சி-1806இல் இந்திய சிப்பாய்களின் வீரமிக்க போராட்டங்களை மிகவும் சிறப்பாக இன்றைய இளைய தலை முறையினர் அறிந்துகொள்ளும் வகையில் அருமையாகப் படம்பிடித்துக் காட்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

– கடல் நாகராசன், கடலூர்

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

சரம் : 47
மலர் : 06

1448 ரபியுல் அவ்வல் 18 - ரபியுல் ஆகிர் 3 ● 2026 செப்டம்பர் 1-15

# வெற்றித் தமிழகம் சாத்தியமா?

*சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் கஞ்சா விற்பனையைத் தட்டிக் கேட்ட 23 வயது விஷ்ணுவை 2026 ஜூன் 1ஆம் தேதி போதைக் கும்பல் அம்மிக்கல், சுத்தியல், பீர் பாட்டில்களால் அடித்துக் கொலை செய்துள்ளது. இக்கொலை வழக்கில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*2026 ஆகஸ்ட் 10ஆம் தேதி கோவை இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்த கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த மாணவர் அமுதன் சக மாணவர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவத்தில் 15 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் விவகாரம் தொடர்பாகக் காட்டிக் கொடுத்ததாகக் கூறி நண்பர்களே அமுதனைப் படுகொலை செய்துள்ளனர்.*

*2026 ஆகஸ்ட் 14ஆம் நாள் சென்னை திருவொற்றியூர் விம்கோ நகர் அரசுப் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வந்த மாணவர் தனுஷ் குமாரை சக மாணவர்கள் 30பேர் சேர்ந்து அடித்துக் கொன்றுள்ளனர். இந்த வழக்கில் தொடர்புடைய மாணவர்கள் 16 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இவர்களில் பலரும் சிறார்கள் என்பதால் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளனர். மாணவர்களிடையேயான முன்விரோதமே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் எனக் கூறப்பட்டாலும் கஞ்சா போதையைத் தட்டிக் கேட்டதால்தான் இந்தக் கொலை நடந்ததாக மாணவரின் தந்தை வெங்கடேசன் குற்றம் சாட்டி உள்ளார்.*

*மதுவும், போதையும் தமிழ்நாட்டைக் கவ்விப் பிடித்திருக்கின்ற சூழலில் பள்ளி கல்லூரி வளாகங்கள் போதைக் கூடங்களாக மாறி வருகின்றன. தக்கலை அரசுப் பள்ளியில் மாணவிகள் மது அருந்திய வீடியோ வைரலானதைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மாணவ, இளைஞர்களிடையே தீயாய்ப் பரவும் இந்தப் பெருந்தீமையின் பெருக்கம் கொலையில் முடிந்திருக்கின்றது.*

*சட்டப் பேரவையில் இந்தக் கொலைகள் தொடர்பாக விளக்கமளித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். இதுபோன்ற சம்பவங்கள் இனி நடக்காமல் இருக்கும் வகையில் வழிகாட்டும் நெறிமுறைகள் பின்பற்றப்பட உள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் இது இத்துடன் முடிந்து விடுகின்ற விவகாரம் அல்ல.*

*‘போதைப் பொருட்களை நாங்கள் பயன்படுத்துவோம். அதைக் குறித்து காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தாலோ, தட்டிக் கேட்டாலோ அவர்*

களைக் கொலை செய்வோம்' என்பதுதான் இந்த நிகழ்வுகள் நமக்குச் சொல் கின்ற செய்தி. வளர் இளம் பருவத்தினர் பள்ளி, கல்லூரி வளாகத்திலேயே சக மாணவர்களை அடித்துக் கொல்கிறார்கள் என்றால் மது, போதையின் உக்கிரத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இளஞ்சிறார்கள், மாணவர்கள் என்று கருணை காட்டாமல் இக்கொலை யில் ஈடுபட்ட கயவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அரசின் அலட்சியமும் காவல்துறையின் பொறுப்பற்ற போக்கும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கவை. போதைப் பொருள்கள் குறித்து காவல்துறையிடம் தகவல் சொன்னதை காவல்துறை குற்றவாளிகளுக்குத் தகவல் கொடுத்ததாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டையும் விசாரித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைப் பொருள்கள் பயன்பாடு குறித்து தகவல் தருபவர்களின் பெயர்கள் ரகசியமாக வைக்கப்படுவதுடன் அவர்களுடைய பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். பள்ளி, கல்லூரி வளாகங்களில் போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத வகையில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு அரசு 717 மதுக்கடைகளை மூடுவதற்கு உத்தரவிட்டதும், போதைப் பழக்கத்திலிருந்து மீள்வதற்கும், மறுவாழ்வு மையம் அமைப்பதற்கும் 70 கோடி பட்ஜெட் ஒதுக்கி போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்று அரசு விழிப்பு உணர்வு ஏற்படுத்தி வருவதும் வரவேற்கத்தக்கது. அதே வேளையில் மதுபான சில்லறை விற்பனைத் துறையில் நடைபெற்று வரும் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் தனியாக இயங்கும் FL 2 உரிமம் பெற்றுள்ள உணவகங்களை ரெஸ்டோ பார்களாகச் செயல்பட தமிழக அரசு அனுமதிக்க உள்ளதாக வரும் செய்தி கவலையளிக்கின்றது.

மதுவையும், போதைப் பொருட்களையும் பிரித்துப் பார்க்க முடியாது. மதுவும் போதையே! போதைப் பொருட்கள் வைத்திருப்பது சட்டப்படி குற்றம். ஆனால் அரசே போதை தரும் மதுவை டாஸ்மாக் மூலம் விற்பனை செய்வது குற்றம் இல்லை என்பது முரணாக உள்ளது. மதுவை ஒழிக்காமல் மாற்றம் இங்கு சாத்தியமில்லை. பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே போதை இல்லாத தமிழ்நாடு சாத்தியம்.

அரசின் நிதிநிலையைச் சரிக்கட்ட மதுவினால் வரும் வருமானம் உதவி யாக இருப்பதாகக் கருதலாம். ஆனால் அந்த வருமானங்களை விட மது வினால் வரும் கேடுகளினால் ஏற்படும் இழப்புகளும், விபத்துகளும், நோய் களும், செலவினங்களும் அதிகம் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.


மதுவும், போதையும் அதிகரித்துவரும் சூழலில் என்னதான் திட்டங் களைத் தீட்டினாலும் தமிழ்நாட்டை ஒருபோதும் வெற்றித் தமிழகமாக மாற்ற முடியாது என்பதை அரசு உணர்ந்து மது, போதையை முற்றிலும் ஒழிக்க முன்வர வேண்டும்.

**ஆறுகள் இறைவன் அளித்திருக்கிற மிகப்பெரிய அருட்கொடையாகும். ஆறுகள் பொதுவாக ஓரிடத்தில் உற்பத்தியானாலும் பல நாடுகளைக் கடந்து பல மாநிலங்களைக் கடந்து இறுதியில் கடலில் கலக்கிறது. ஆறு உற்பத்தியாகும் பகுதிகளில் உள்ள நாடோ மாநிலமோ அது அதன் கடைக்கோடியை அடைய விடாமல் அணைகளைக் கட்டி நீர்வரத்தைத் தடுக்கின்றன. அதனால் பாதிக்கப்படும் நாடுகள் பிரச்னைகளை எழுப்புகின்றன. இதற்கு உலக அளவில் சட்டங்களும், ஒப்பந்தங்களும் செயல்படுத்தப்படுகின்றன.**

**இந்தியாவில் குறிப்பாக காவிரி ஆற்றின் நீர் பிரச்னை கர்நாடகா, தமிழ்நாடு இடையே தொடர்ந்து நீடித்து வருகிறது. ஒன்றிய அரசு பல நிலைகளில் இதற்கான தீர்வுகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் கர்நாடகா அதனை முழுமையாக ஏற்று செயல்படுத்துவதில்லை. இப்போது தமிழ்நாட்டு எல்லைக்கு அருகில் மேகதாது என்ற அணையைக் கட்ட முயற்சிப்பது பெரிய பிரச்னையாக வெடித்திருக்கிறது.**

# காவிரியும் கடைமடை விவசாயியும்..!

**– கப்ளிசேட்**



இறைவன் அளித்திருக்கும் வரங்களில் ஒன்று தண்ணீர். தண்ணீர் கிடைக்க மிக முக்கியக் காரணம் மழை. மழை நிலத்தடி நீராக பல நிலைகளில் கிடைக்கிறது. குளம், குட்டை, கிணறு, ஓடை, வாய்க்கால் எனப் பல நிலைகளில் நீர் கிடைத்தாலும், ஆறு என்பது மிக நீண்ட தூரங்கள் ஓடி எல்லா நிலப் பரப்புகளையும் செழிக்க வைத்து விவசாயத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

உலகில் ஏராளமான ஜீவ நதிகளாக, எல்லாக் காலங்களிலும் நீரை அளிக்கும் ஆறுகளும் உள்ளன. இந்தியாவில் இருக்கும் மிக முக்கிய ஆறுகளில் காவிரியும் ஒன்று. அது கர்நாடகாவில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் தனது பயணத்தை முடித்து கடலில் கலக்கிறது. தமிழ்நாட்டின் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர், வெள்ளம் வந்து அபரிதமான நீர் வழிந்தோடும் போது மட்டுமே கிடைக்கிறது. மற்ற சாதாரண காலங்களில் ஆறுகளின் நீர் அவர்களுக்குத் தாராளமாகக் கிடைப்பதில்லை.

நதிநீர் ஒப்பந்தங்கள், கடைமடைக்கான உரிமைகள் என எல்லாம் இருந்தும், அரசாங்கங்கள் அதை மதிப்பதில்லை. ஆண்டுதோறும் கர்நாடகா, தமிழ்நாட்டிற்கிடையே நதிநீர் பிரச்னை தீராமல் இருக்கும் சூழலில் இப்போது புதிதாக மேகதாது அணை பிரச்னை எழுந்துள்ளது.

கர்நாடக அரசு, காவிரி அர்க்காவதி இணையும் இடத்தில் பெங்களூர் மக்களின் குடிநீர்த் தேவைக்காகவும், மின்சாரம் தயாரிக்கவும் ஒரு சமநிலை நீர்த் தேக்கத்தை(Balancing Reservoir) அமைக்கத் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு கீழ்ப்பகுதியில் உள்ள மாநிலம்

என்பதால் இந்த இடத்தில் அணை கட்டப் பட்டால் காவிரி நதிநீர் உரிமை பாதிக்கப் படும், தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய நீரின் அளவும் குறையும் என்று திட்டவட்டமாக எதிர்க்கிறது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன் றத்திலும், காவிரி நதிநீர் ஆணையத்திலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து சட்டப் போராட் டங்களை நடத்தி வருகிறது.

கர்நாடக அரசு மேகதாது அணைக்கு அடிக்கல் நாட்ட முயன்றபோது விஜய் தலை மையிலான அரசு பொறுப்பேற்ற நிலை யில் காவிரி நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஜுன் மாதம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மேகதாது திட்டத்திற்கு ஒன்றிய அரசு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் அனுமதிகளை வழங்கக்கூடாது என வலியுறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் காவிரியின் குறுக்கே அணை கட்டுவதற்கு தமிழ்நாட்டிடம் அனு மதி கேட்கத் தேவையில்லை என்றும் மேக தாதுவில் புதிதாக அணை கட்டுவது தொடர் பான விரிவான திட்டத்தை ஒன்றிய அரசி டம் சமர்பிக்க உள்ளதாகவும் கர்நாடக துணை முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் அண்மையில் தெரிவித்திருந்தார். ஒன்றிய அரசு அனுமதி அளித்தவுடன் அணை கட்டு வதற்கான பூமி பூஜை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இதற்கு தமிழ் நாட்டின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர் களும் கடும் கண்டனத்தைத் தெரிவித் துள்ளனர்.

2026 மே 27ஆம் தேதி டெல்லி சென்றி ருந்த முதலமைச்சர் விஜய் மூத்த வழக்கறிஞர் ஜி.உமாபதியுடன் மேகதாது விவகாரம் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார். அதில் பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர தீர்மானிக்கப்பட்ட நிலையில் தமிழ் நாடு அரசு சார்பில் முனைவர் ராமசங்கர் மனுத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு திட்டமிட்டிருப்பது சட்ட விரோதம் என்று அறிவித்து திட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசு குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் இலட்சக்கணக்கான மரங்கள் வெட்டப்படும். இதனால் அப் பகுதியிலுள்ள வன விலங்குகள், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் பாதிக்கப்படும். உரிய சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் அணைக்கான பூமி பூஜை போடக்கூடாது. சுற்றுச்சூழல் விதிகளை மீறும் மேகதாது அணை திட்டத்துக்கு ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்ச கம் அனுமதி தர தடை விதிக்க வேண்டும் என்று வழக்குத் தொடர்ந்திருப்பதாக அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மே 25ஆம் தேதி முதல் அமைச்சர் விஜய் தலைமையில் இது தொடர்பாக ஆலோச னைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோ சனைக்குப் பிறகு தீர்ப்பு விவரங்களைக் கருத்தில் கொண்டு தொடர் சட்ட நடவடிக் கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் விஜய் அறிவுறுத்தி இருந்தார். இதனைத் தொடர்ந்து அடுத்த நாளே (மே 26) இது குறித்து பிரதமருக்கு கடிதமும் எழுதியிருந்தார். அதில் பிற மாநிலங்களின் ஒப்புதலைப் பெறாமல் எந்த ஒரு திட் டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எந்த வகை யிலும் மீறக்கூடாது என்றும் கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு பிரதமரிடம் கோரிக்கை வைத்தார். தேவை ஏற்படும் பட் சத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி முடிவுகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

காவிரி ஆறு கர்நாடகத்தின் குடகு மலைப் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து 4186 அடி உயரத்திலிருந்து தனது பயணத்தைத் தொடங்கும் இடத்திற்கு தலைக்காவேரி என்று பெயர். கர்நாடகாவில் 320 கி.மீ தூரமும் தமிழ்நாட்டில் 416 கி.மீ தூரமும் பயணிக்கும் காவிரி தமிழ்நாட்டில் பூம்பு காரில் வங்கக்கடலில் கலக்கிறது. இரு மாநில எல்லையில் 64 கி.மீ சேர்த்தால் காவிரியின் மொத்த நீளம் 800 கி.மீ. ஆகும்.

கர்நாடகாவில் குடகு, ஹாஸன், மைசூர், மாண்டியா, பெங்களூரின் ஊரகப்பகுதிகள் சாம்ராஜ் நகர மாவட்டங்கள் வழியாகப் பயணித்து தமிழ்நாட்டில் நுழைந்து தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து சென்று இறுதியில் கடலில் கலக்கிறது. காவிரிக்கரையில் கர்நாடகத்தில் குசால் நகர், மைசூர், ரங்கப்பட்டிணம், தமிழ் நாட்டில் மேட்டூர், ஈரோடு, கரூர், முசிறி, குளித் தலை, திருச்சி, திருவையாறு, கும்பகோணம், மயிலாடுதுறை, பூம்புகார் ஆகிய நகரங்கள் அமைந்துள்ளன.

துணை ஆறுகள், கிளை ஆறுகள் ஆகி யவை சேர்ந்து காவிரியின் நீர்ப்பரப்பு 81,303 சதுர கி.மீ ஆகும். இதில் தமிழ்நாட்டில் 43,856 சதுர கி.மீ ஆகவும் கர்நாடகாவில் 34,273 சதுர கி.மீ ஆகவும் கேரளாவில் 2866 சதுர கி.மீ ஆகவும் புதுவையில்160 சதுர கி.மீ ஆகவும் உள்ளது. காவிரியில் சராசரியாகப் பாயும் நீரின் அளவு 23,908 கனஅடி என்றும் குறிப்பிடப்படுகிறது. கர்நாடகாவிலிருந்து காவேரி பிலிகுண்டு வழியாக ஒக்கேனக்கல் அருவியை அடைகிறது. நிறைய சிற்றாறு களின் கலப்போடு மேட்டூர் அணையை அடைகிறது.

மேட்டூரிலிருந்து தமிழ்நாட்டின் நீர் பாசனப் பரப்பு தொடங்குகிறது. மேட்டூர் அணையின் நீளம் 5300 அடி. உயரம் 176 அடி. மேட்டூர் அணையின் நீர் நிலையான ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் பரப்பளவு 155 சதுர கி.மீ ஆகும். மேட்டூரிலிருந்து புறப்படும் காவிரியுடன் பவானி ஆறு கலந்து ஈரோட்டை அடைகிறது. கொடுமுடி அருகிலுள்ள நொய் யலில் நொய்யலாற்றுடன் காவிரி கலக்கிறது. கரூர் அருகேயுள்ள கட்டளையில் அமராவதி ஆற்றுடன் காவிரி கலக்கிறது. கரூர், திருச்சி மாவட்டங்களில் காவிரி விரிந்து செல்வதால் அகண்ட காவேரி என்று அழைக்கப்படுகிறது.


முசிறி, குளித்தலை நகரங்களைத் தாண்டி திருச்சிக்குச் சற்று முன்னர் உள்ள முக்கொம் பில்மேலணையைகாவேரிஅடைகிறது.அங்கு இரண்டாகப் பிரிந்து ஒரு கிளை கொள்ளிடம் ஆகிறது. வெள்ளம் அதிகமாக வரும்போது மிகையாக வரும் நீரை கொள்ளிடத்திற்குத் திருப்பி விடுவர். காவிரிக்கு கொள்ளிடம் வடிகால் போல காவிரி கழிமுகத்தில் பாயும் முதன்மையான எல்லா ஆறுகளுக்கும் வடிகால் ஆறுகள் உண்டு. ஒவ்வொரு ஊரிலும் நீர்ப்பாசன வாய்க்கால் போல வடி கால் வாய்க்கால்களும் இருப்பது தமிழ் நிலத் தின் நீர் மேலாண்மைக்கான சான்றாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காவிரியின் வெள்ளப் பெருக்கைத் தடுத்து மக்களுக்குப் பயனளிக்கும் விதமாகக் கல்லும், மண்ணும் கொண்டு கரிகால் சோழன் கட்டிய கல்லணை இன்றும் உலகிலேயே புழக்கத் திலுள்ள நான்காவது அணையாகும். கல்ல ணையிலிருந்து பூம்புகார் வரை காவிரிக்கு கரைகட்டியுள்ளான் கரிகால் சோழன். கல்ல ணையிலிருந்து வெளியாகும் நீரின் சராசரி அளவு 8324 கன அடியாகும். இது அரசலாறு, வெண்ணாறு, வெட்டாரு, குடமுருட்டி ஆறு, புது ஆறு, மன்னியாறு எனப் பல கிளை ஆறுகளாக தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓடி நிலங்களை வளப்படுத்திச் செல்கிறது.

தமிழ்நாட்டில் முப்பது இலட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரியால் பயனடைந்து நெற் களஞ்சியமாக உள்ளது. ஏராளமான கிரா மங்கள், நகரங்களின் குடிநீர்த் தேவையை காவிரி நிவர்த்தி செய்கிறது. வீராணம் திட் டத்தின் மூலம் காவிரி நீர் சென்னைக்கும் குடி நீராகப் பயன் தருகிறது. ஒரு காலத்தில் வற்றாத ஜீவ நதியாக இருந்த காவிரி பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை இப்போது வறண்டு விட்டது.

1892ஆம் ஆண்டு கிருஷ்ணராஜ சாகர் அணையையும், தமிழ்நாட்டில் மேட்டூர் அணையையும் அடிப்படையாக வைத்து இந்திய அரசின் மேற்பார்வையில் சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத் திற்கும் 50 ஆண்டு கால ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படியே காவிரி நீர் பகிர்வு நடந்து வந்தது. 1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் சீரமைப்பில், குடகு கர்நாடகத்தின் பகுதியானது. காரைக்கால்

காவிரி நீரால் பயனடைந்து வந்தது. கபினியின் பிறப்பிடம் கேரளாவில் அமைந்துள்ளது. ஆகவே காவிரி நீரில் பங்கை புதிதாக புதுவையும் கேரளாவும் கேட்டன.




1960ஆம் ஆண்டு தொடங்கி பத்து ஆண்டுகள் பேச்சுவார்த்தைகள் நீண்டன. 1970ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட காவிரி உண்மை அறியும் குழு மூலம் தமிழ்நாட்டின் பாசனப்பரப்பு 25,80,000 ஏக்கர் எனவும், கர்நாடகத்தின் நீர் பாசனப்பரப்பு 6,80,000 எனவும் தெரியவந்தது. தமிழ்நாடு தன் பாசனப் பரப்பைச் சுருக்க விரும்பாமலும் கர்நாடகா தனது பாசனப்பரப்பை விரிவாக்க விரும்பியதும் உடன்பாடு எட்ட முடியாமல் போனதற்கான காரணங்களாகும்.

1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்ததால் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால் தமிழ்நாடு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. பிறகு திரும்பப் பெறப்பட்டது. 1986ஆம் ஆண்டு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று கோரியது. உச்ச நீதிமன்ற ஆணைப்படி 1990 ஜூன் 2ஆம் தேதி வி.பி. சிங் தலைமையிலான அரசு காவிரி தீர்ப்பாயம் அமைத்தது. தீர்ப்பாயத்திடம் தமிழ்நாடு 566, கர்நாடகம் 465 கேரளம் 99.8, புதுச்சேரி 9.3 TMC (ஒரு TMC என்பது 100 கோடி கன அடி) அளவு நீரை கேட்டார்கள். தமிழ்நாடு உடனடியாக நீரைத் திறக்கக் கோரியது. அதனை தீர்ப்பாயம் ஏற்காததால் உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகியது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தீர்ப்பாயம் மறுபரிசீலனை செய்து இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது.

1980-81, 1988-90 இடைப்பட்ட பத்து ஆண்டு சராசரியைக் கணக்கிட்டு ஒவ்வொரு நீர்ப்பாசன ஆண்டிலும் கர்நாடகம் தமிழ்நாட்டிற்கு 205 TMC தண்ணீரை வழங்க வேண்டும் என்பதே இடைக்காலத் தீர்ப்பாகும். ஒவ்வொரு மாத வாரியாக கர்நாடகம் திறந்துவிட வேண்டிய நீரின் அளவு வரையறுக்கப்பட்டது. கர்நாடகம் அதன் பாசனப்பரப்பை 11,20,000 ஏக்கருக்கு மேல் விரிவுபடுத்தக் கூடாது என்றும் தீர்ப்பாயம் ஆணையிட்டது. இடைக்காலத் தீர்ப்புக்கு எதிராக கர்நாடகா அவசரச் சட்டம் பிறப்பித்தது. குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டதால் உச்சநீதிமன்றம் தலையிட்டு அவசரச் சட்டத்தை நீக்கியது. தீர்ப்பாயத்தின் தீர்ப்பு 1991ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிடப் பட்டது.

கர்நாடகாவில் இதனை எதிர்த்து கலவரங்கள் மூண்டது. தமிழர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். அகதிகளாக தமிழர்கள் வெளியேறி தமிழ்நாட்டிற்கு வந்தனர். 1992, 93, 94 ஆண்டுகளில் நல்ல மழைப்பொழிவு இருந்ததால் பிரச்னை ஏற்படவில்லை. 1995 ஆம் ஆண்டு பருவமழை பொய்த்ததால் கர்நாடகம் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த மறுத்து விட்டது. உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடுத்தது.

1997ஆம் ஆண்டு இந்திய அரசு காவிரி ஆணையம் அமைத்தது. அதை கர்நாடகா ஏற்காததால் இந்த ஆணையம் அதிகாரமற்றதாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் தமிழ்நாடு தீர்ப்பாயத்தை அணுக தீர்ப்பாயம் 11 TMC தண்ணீரைத் திறக்க ஆணையிட்டது. இதை கர்நாடகம் ஏற்கவில்லை. 2007ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் தேதி தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பை வழங்கியது. கொள்ளிடம் கீழணை வரை காவிரியில் ஓராண்டில் கிடைக்கும் மொத்தம் நீரின் அளவு 740

TMC ஆகும். இதில் இறுதித் தீர்ப்பின் படி கடலில் கலப்பதற்கும், சுற்றுச்சூழலுக்கும் 14 TMC போக தமிழ்நாட்டிற்கு 419 TMC, கர்நாடகத்திற்கு 270 TMC கேரளத்திற்கு 30 TMC புதுவைக்கு 7 TMC ஒதுக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் பங்கில் தமிழ்நாட்டிற்குள் கிடைப்பது போக கர்நாடகா திறந்துவிட வேண்டியது 192 TMCதான். இடைக்காலத் தீர்ப்பில் 205 TMC இறுதித் தீர்ப்பில் 192 TMC ஆகக் குறைந்து போனது. ஒரு மாதத்தில் தண்ணீர் குறைவாகக் கொடுத்தால் அடுத் தடுத்த மாதங்களில் அந்த நிலுவை நீரைக் கொடுத்து நேர் செய்ய வேண்டும். இதனை கர்நாடகா எதிர்க்கிறது. இதனைத் தெளிவாக ஊடகவியலாளரும் பொறியாளருமான தியாகு குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் (CWMA), அதன் கீழ் செயலாற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு (CWRC) ஆகியவை ஒன்றிய அரசால் அமைக் கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. இது நதி நீர் பகிர்வு தொடர்பான ஒட்டுமொத்த முடிவு களை எடுக்கும் உச்சபட்ச அமைப்பாகும். காவிரி ஒழுங்காற்றுக் குழு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டு தல்படி அணைகளில் நீர்மட்டம், நீர்வரத்து, திறப்பு போன்ற அன்றாடச் செயல்பாடுகளை கண்காணித்து அறிக்கை அளிக்கும்.

கர்நாடகாவில் பருவமழை குறைவாக இருப்பதால் தமிழ்நாட்டிற்கு நீர் திறப் பது குறித்து முடிவெடுக்க காவிரி நீர் ஒழுங்குமுறை குழு ஜூலை 28 வரை காத் திருக்க முடிவு செய்துள்ளது. மேலும் தமிழ் நாட்டிற்கான ஜூன், ஜூலை மாத நீரைத் திறந்துவிட காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டபோதும் கர்நாடகா தனது குடி நீர், விவசாயத் தேவைகளைக் காரணம் காட்டி தாமதித்து வருகிறது.

இந்த இழுபறி நிலையில் மேட்டூர் அணையைப் போல கிட்டத்தட்ட முக்கால் பங்கு தண்ணீரைத் தேக்கும் திட்டத்தில்

**கடைமடையில் தனது நிலத்தையே நம்பி வாழுகிற ஒரு விவசாயிக்குக் கிடைக்கும் தண்ணீர் உரிமையை மறுப்பது மிகப்பெரிய குற்றம்**

மேகதாது அணையைக் கட்ட கர்நாடகா முயற்சிக்கிறது. உத்தேச மேகதாது அணையி லிருந்து தமிழ்நாட்டு எல்லை 4 கி.மீ தூரத்தில் உள்ளது. ஆகவே அணைக்குக் கீழ்ப்பகுதியில் கர்நாடகாவிற்கு ஆயக்கட்டே(ஆற்றினால் பாசனம் பெறும் நிலப்பரப்பு) இருக்க வாய்ப் பில்லை. ஆயக்கட்டே இல்லாமல் 67.14 TMC தேக்கி வைக்க முயல்வது நிச்சயமாக சரியான செயல் இல்லை. 18 இலட்சம் ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள மேட்டூர் அணையின் கொள்ளளவு 93.47 TMC தான். காவிரி தமிழ்நாட்டு எல்லைக்குள் வரும் இறுதி எல்லையில் மேகதாது அணை அமைய வேண்டும் என்பது கர்நாடக அர சின் திட்டமாகும்.

இதன் மூலம் கர்நாடகா காவிரியைத் தனது வடிகாலாக நினைக்கிறதே தவிர தமிழ் நாட்டின் பாசன ஆறாக நினைக்கவில்லை. கடைமடையில் தனது நிலத்தையே நம்பி வாழுகிற ஒரு விவசாயிக்குக் கிடைக்கும் தண்ணீர் உரிமையை மறுப்பது மிகப்பெரிய குற்றம் என்பதே கடைமடை விவசாயின் மனநிலையாக இருக்கும். இயற்கையாகக் கிடைக்கிற ஆற்று நீரைத் தடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைப்பதை யாரும் ஏற்கமாட்டார்கள். மேகதாது அணை மூலம் ஏற்கனவே சிறிதளவு கிடைக்கும் நீரையும் முற்றிலும் கிடைக்காமல் செய்யும் தந்திர மாகவே காவிரி கடைமடை விவசாயி பார்க் கிறான். காவிரி நதிநீர் பிரச்னையை கர்நாடகா மனிதநேயத்தோடு அணுகி கடைமடை விவசாயியும் நீரைப் பெறும் நாளுக்காக தமிழ்நாடு காத்திருக்கிறது..!

# பெற்றோரைப் போற்றும் பிள்ளைகளாக..!

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

**'அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய் தந்தையரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். பெற்றோரில் ஒருவரோ இருவருமோ முதுமையை அடைந்துவிட்ட நிலையில் உம்மிடம் இருந்தால், அவர்களை 'சீ என்று கூடக் கூறாதீர்! மேலும், அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக, அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக! மேலும், பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக! மேலும், நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக: என் இறைவனே! சிறுவயதில் எவ்வாறு என்னை இவர்கள் கருணையுடனும் பாசத்துடனும் வளர்த்தார்களோ அவ்வாறு இவர்கள் மீது நீ கருணை புரிவாயாக! (திருக்குர்ஆன் 17: 23,24)**

உங்களது தந்தையும் தாயும் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா? அப்படியாயின் நீங்கள் பெரும் பாக்கியசாலிகள். அவர்களின் நிழலில் வாழும் வாழ்க்கையை நீங்கள் மிகப் பெரும் ஓர் அருளாகப் பார்க்க வேண்டும்; அதனைப் போற்ற வேண்டும்.

அவர்களின் அறிவுரைகளையும் விமர்சனங்களையும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களின் கோபத்தைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களின் கோபம் உண்மையான அன்பின், கரிசனையின் வெளிப்பாடு. அவர்கள் உங்களை உங்களைவிட அதிகமாக நேசிப்பவர்கள்; உங்களது விவகாரங்களில் உங்களை விட கரிசனை கொண்டவர்கள் என்பதை உணருங்கள்.

ஒருநாள் வரும். அன்று உங்கள் பெற்றோர் உங்களை ஒரு கணம் கண்டித்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றும். அவர்கள் அன்புடன் உங்களைக் கண்டிக்கும் ஒரு பார்வைக்காக நீங்கள் ஏங்கக் கூடும். ஆனால் அப்போது அவர்கள் உங்களுடன் இருக்க மாட்டார்கள். அவர்களை நீங்கள் காண்பது, அவர்களுக்காக நீங்கள் செய்யும் ஒரு துஆவிலோ, அல்லது மனதில் மின்னி விட்டு மறையும் இனியொரு நினைவிலோ தான் இருக்கும்.



எனவே பெற்றோருடனான உறவை எப்போதும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நாளைக்கு ஒத்தி வைக்காதீர்கள். அவர்களின் திருப்தியில் உங்களது ஈருலக வெற்றியும் தங்கியுள்ளது என்ற உண்மையை ஆழமாக உணருங்கள்.

பின்வரும் நபிமொழி உங்களது உள்ளங்களில் எப்போதும் பசுமையாக இருக்கட்டும்: 'அல்லாஹ்வின் திருப்தி பெற்றோரின் திருப்தியில் உள்ளது; அல்லாஹ்வின் கோபம் பெற்றோரின் கோபத்தில் உள்ளது'

'யா அல்லாஹ்! எங்கள் பெற்றோர் உயிருடன் இருக்கும் காலத்திலும், அவர்கள் இறந்த பின்னரும் அவர்களுக்கு நன்மை செய்யும் பாக்கியத்தை எங்களுக்கு அருள்வாயாக! அவர்களை என்றும் நினைவுகூரும் மக்களாகவும், அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவோராகவும் எங்களை ஆக்குவாயாக! எங்களில் இறந்துபோன பெற்றோரின் பாவங்களை மன்னித்து, அவர்களுக்கு உன் உயர்ந்த சுவனத்தில் இடமளிப்பாயாக. உன் திருப்தியை அடைவதற்கான ஒரு காரணியாக அவர்களை எங்களுக்கு ஆக்குவாயாக! ஆமீன்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: ‘அவர்களின் மீதுள்ள சுமையை இறக்குகின்றார்; அவர்களைப் பிணைத்திருந்த விலங்குகளையும் உடைத்தெறிகின்றார். எனவே எவர்கள் இந்நபி மீது நம்பிக்கை கொண்டு இவரைக் கண்ணியப்படுத்தி, உதவியும் புரிகின்றார்களோ, மேலும் இவருடன் இறக்கியருளப்பட்ட ஒளியினைப் பின்பற்றுகிறார்களோ அவர்களே வெற்றி யாளர்களாவர்’ (திருக்குர்ஆன் 7:157)

மௌலானா இனாமுல் ஹசன்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘திருமணம் ஓர் அவசியமான இபாதத்தாகும். ஆனால் நாம் அதை ஒரு சுமையாக மாற்றிவிட்டோம். அல்லாஹ்வின் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் திருமணத்தை மிகவும் எளிமையாகவும் சுலபமாகவும் ஆக்கினார்கள்.

மாபெரும் நபித்தோழரான ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்கள் ஓர் அன்சாரிப் பெண்ணைத் திருமணம் செய்தார்கள். அந்தத் திருமணம் நபி(ஸல்) அவர்களுக்குக்கூட உடனடியாகத் தெரியவில்லை. பின்னர் அவரிடம் அதைப் பற்றி அறிந்த நபி(ஸல்) அவர்கள், ‘ஓர் ஆட்டை அறுத்தாவது (வலீமா) விருந்து கொடுங்கள்’ என்று கூறினார்கள்.

# எளிமையான திருமணம்


**- H. அப்துர் ரகீப்**
பொதுச் செயலாளர்,
இந்திய இஸ்லாமிய நிதி மையம்,
புது தில்லி


அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள், சுவனத்தின் நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபித்தோழர்களில் ஒருவராகவும், மதீனாவின் மிகவும் செல்வம் மிக்க தோழர்களில் ஒருவராகவும் இருந்தபோதிலும் அவருடைய திருமணம் மிகுந்த எளிமையுடனும் ஆடம்பரமின்றியும் நடைபெற்றது.

திருமணம் எளிமையாகவும், சிக்கனமாகவும், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் வழிமுறையிலும் நடத்தப்பட்டால், முஸ்லிம் சமுதாயத்தின் பொருளாதார நிலையில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும்.

அது பொருளாதார முன்னேற்றத்தை மட்டுமல்ல; தூய்மையான குடும்பச் சூழலையும், ஒழுக்கமிக்க சமூகத்தையும், மகிழ்ச்சியும் மன நிம்மதியும் நிறைந்த வாழ்க்கையையும் உருவாக்கும்.

இன்று பிற சமுதாயங்களைப் பின்பற்றி நாமே நமக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு, திருமணத்தை உண்மையிலேயே ஒரு பெரும் சுமையாக மாற்றிவிட்டோம். திருமணத்தை இவ்வளவு சடங்குகள், சம்பிரதாயங்கள், செலவுகள், வீண் ஆடம்பரங்களுடன் இணைத்துவிட்டதன் காரணமாக






**திருமணத்தை இவ்வளவு சடங்குகள், சம்பிரதாயங்கள், செலவுகள், வீண் ஆடம்பரங்களுடன் இணைத்து விட்டதன் காரணமாக ஏழைக் குடும்பங்களிலும், குறிப்பாக நடுத்தரக் குடும்பங்களிலும், பெண்கள் திருமணமாகாமல் நீண்ட காலம் வயதைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிலர் தவறான வழிகளிலும் செல்ல நேரிடுகிறது.**

ஏழைக் குடும்பங்களிலும், குறிப்பாக நடுத்தரக் குடும்பங்களிலும், பெண்கள் திருமணமாகாமல் நீண்ட காலம் வயதைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிலர் தவறான வழிகளிலும் செல்ல நேரிடுகிறது.

இன்றைய காலத்தில் திருமணத்தை எளிமையாகவும், சுலபமாகவும், நபி(ஸல்) அவர்களின் வழிமுறையிலும் நடத்துவது ஒரு சமூக, பொருளாதார ஜிஹாதாகும். போலியான சடங்குகள், தேவையற்ற சம்பிரதாயங்களின் காரணமாக பெண்களுக்கு உரிய நேரத்தில் திருமணம் நடைபெறாமல் போனால் அதற்காக இவ்வுலகில் இறைவனின் படைப்புகளுக்கு முன்னால் பதில் அளிக்க வேண்டியிருக்கும்; இறுதியில் எவ்வளவு இபாதத்துகளையும் இறையச்சத்தையும் கொண்டிருந்தாலும் மறுமையில் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்ப முடியாது என்ற உணர்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும்.

அறியாமைக் காலத்தில் உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தைகளின் வேதனையை திருக்குர்ஆன் பதிவு செய்கிறது. மறுமை நாளில் அவர்கள், 'எந்தக் குற்றத்திற்காக நாங்கள் உயிருடன் புதைக்கப்பட்டோம்?' என்று அல்லாஹ்விடம் கேட்பார்கள்.

அதேபோன்று சமூகத்தில் நிலவும் தேவையற்ற சடங்குகள், சம்பிரதாயங்களின் காரணமாக உரிய நேரத்தில் திருமணம் நடைபெறாமல் போன பெண்களும் அல்லாஹ்விடம் முறையிடுவார்கள்: 'இஸ்லாமிய ஷரீஅத் எங்களுக்குத் தடையாக இருக்கவில்லை. சமூகத்தின் பொறுப்பாளர்கள், செல்வந்தர்களின் வீண் ஆடம்பரங்கள், தேவையற்ற சடங்குகளின் காரணமாகவே எங்களுடைய நியாயமான உரிமை எங்களுக்குக் கிடைக்கவில்லை' என்று அவர்கள் புகார் தெரிவிப்பார்கள். நிச்சயமாக அல்லாஹ் அநீதிக்கு உள்ளானவர்களின் முறையீட்டிற்கு நீதி வழங்குவான்.

('இஸ்லாமியப் பொருளாதாரம்' என்ற நூலிலிருந்து..)

**ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!**

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# தமிழ்நாட்டின் உரையாடல் கலாச்சாரம் எங்கே செல்கிறது?

**- ஐ.ஜலாலுதீன்**

**தமிழ்நாடு என்பது வெறும் ஒரு புவியியல் எல்லை அல்ல. அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக் கடந்து வந்த ஒரு நாகரிகத்தின் பெயர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உலக சகோதரத்துவத்தைப் பேசிய மண் இது. 'அறம் செய விரும்பு' என்று தலைமுறைகளுக்கு அறத்தைப் போதித்த மண் இது. திருவள்ளுவர் தொடங்கி பல்வேறு சிந்தனை மரபுகள் வரை, எப்படி வாழ வேண்டும் என்பதோடு, எப்படிப் பேச வேண்டும் என்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்த மண் இது.**

**ஆனால் இன்று நமது பொது உரையாடல் கலாச்சாரத்தில் ஒரு கவலைக்குரிய மாற்றத்தைப் பார்க்கிறோம்.**

**வார்த்தைகளில் வன்மம் அதிகரிக்கிறது. நடுநிலை குறைகிறது. நீதியான விமர்சனம் தனிநபர் தாக்குதலாக மாறுகிறது. கருத்து வேறுபாடு காழ்ப்பு உணர்வாக மாறுகிறது. சட்டமன்றத்திலிருந்து சமூக ஊடகம் வரை இந்த மாற்றத்தின் தாக்கத்தை நாம் உணர முடிகிறது. இந்த நிலையில், இஸ்லாம் பேச்சுக்கும் உரையாடலுக்கும் அளிக்கும் முக்கியத்துவத்தை அறிவது மிகவும் பொருத்தமானது.**

### *இது அரசியலின் பிரச்னை மட்டுமல்ல ஒரு தலைமுறையின் பிரச்னை*

இன்றைய சூழ்நிலையில் மிகப்பெரிய கவலை அரசியல்வாதிகள் எப்படிப் பேசுகிறார்கள் என்பதைக் காட்டிலும், அவர்களைப் பார்த்து அடுத்த தலைமுறை எப்படி பேசக் கற்றுக்கொள்கிறது என்பதுதான்.

அண்மைக் காலங்களில் அரசியல் நகர்வுகள், சட்டமன்ற விவாதங்கள், அரசியல் தலைவர்களின் உரைகள், தொலைக்காட்சி விவாதங்கள், சமூக ஊடகப் பதிவுகளை இளைஞர்களும் சிறுவர்களும் முன்பைவிட அதிகமாகக் கவனித்து வருகின்றனர்.

அரசியல் இன்று பெரியவர்களின் உலகத்தில் மட்டும் இல்லை. ஒரு சிறுவனின் கையில் இருக்கும் கைப்பேசியில் அரசியல் இருக்கிறது. ஒரு பள்ளி மாணவியின் சமூக ஊடகப் பக்கத்தில் அரசியல் விவாதம் இருக்கிறது. ஒரு கல்லூரி மாணவனின் WhatsApp குழுவில் அரசியல் மீம்ஸ் இருக்கின்றன. ஓர் இளம் பெண்ணின் Instagram அல்லது YouTube feedஇல் அரசியல் விமர்சனங்கள் வருகின்றன. இவ்வாறு அரசியல் மொழி அடுத்த தலைமுறையின் அன்றாட வாழ்க்கைக்குள் நுழைந்துவிட்டது.

அவர்கள் நாம் பேசுவதைக் கேட்கிறார்கள். நாம் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பதிவு செய்கிறார்கள். நாம் எதிரியை எப்படி நடத்துகிறோம் என்பதைப் பார்க்கிறார்கள். பின்னர் அதையே தங்களுடைய உரையாடல் முறையாக மாற்றிக் கொள்கிறார்கள்.

இதுதான் உண்மையான ஆபத்து. நாம் விதைக்கும் வார்த்தைகளையே அடுத்த தலைமுறை அறுவடை செய்யும். ஒரு குழந்தை வீட்டில் பெரியவர்கள் ஒருவரை ஒருவர் மரியாதையுடன் பேசுவதைப் பார்த்தால், அது அவருடைய மொழியைப் பண்படுத்தும். ஒரு மாணவன் ஆசிரியர் எதிர்க் கருத்தைக் கண்ணி

யத்துடன் ஏற்றுக் கொள்வதைப் பார்த்தால், அவனுடைய சிந்தனை வளர்ச்சி பெறும். அதேபோல் ஓர் இளைஞன் தினமும் அரசியல் தலைவர்கள் ஒருவரை ஒருவர் அவமதிப் பதையும், சமூக ஊடகங்களில் எதிராளியை இழிவுபடுத்துவதையும் பார்த்தால், அவ னுக்கு ஒரு தவறான செய்தி செல்கிறது.

கடுமையாகப் பேசுவதுதான் வலிமை, மற்றவரை அவமதிப்பதுதான் வெற்றி, கேலி செய்வதுதான் அரசியல் திறமை, எதிரியை மனிதராக அல்ல, எதிரியாக மட்டுமே பார்க் கலாம் - இவைதான் மிகவும் ஆபத்தான மன நிலை.

நாம் இன்றைய அரசியல் வார்த்தை களைப் பற்றி கவலைப்பட வேண்டிய காரணம் இதுவே. இது ஒரு நாள் அல்லது ஒரு தேர்தலுக்கான பிரச்னை அல்ல. இது அடுத்த இருபது, முப்பது ஆண்டுகளுக்கான சமூக மனநிலையை உருவாக்கக்கூடிய பிரச்னை.

இன்று அரசியல், சமூக ஊடக விவாதங் களில் பெண்களின் பங்கேற்பும் அதிகரித் துள்ளது. இது ஜனநாயகத்தின் நல்ல வளர்ச்சி. பெண்கள் அரசியல் பேச வேண்டும். சமூகப் பிரச்னைகளைப் பற்றி கருத்துத் தெரிவிக்க வேண்டும். அரசியலை விமர் சிக்க வேண்டும். தங்கள் உரிமைகளைப் பற்றி கேள்வி கேட்க வேண்டும். ஆனால், நமது உரையாடலின் தரம் கண்ணியமானதாக இருக்க வேண்டும்.

இன்று சில சமூக ஊடகப் பரப்புகளில் பெண்களும் கூட மிகவும் கடுமையான, இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதைப் பார்க்கிறோம். இதை பெண்களுக்கு மட்டும் உரிய பிரச்னையாகப் பார்க்கக் கூடாது. இது முழு சமூகத்தின் மொழிப் பண்பாடு சீரழிவதற்கான அறிகுறி. பெண்கள் ஒரு சமூகத்தின் மொழி, பண்பாட்டு உருவாக்கத்தில் மிக முக்கியமான பங்கைக் கொண்டவர்கள். அடுத்த தலைமுறையை உருவாக்குவதில் அவர்களின் தாக்கம் அளப் பரியது. அதனால் பெண்களும் ஆண்களும் இணைந்து கண்ணியமான உரையாடலின் முன்மாதிரிகளாக இருக்க வேண்டிய காலம் இது.

ஒரு பதிவை எழுதுவதற்கு முன், ஒரு கருத்தைப் பகிர்வதற்கு முன், ஒருவரை விமர்சிப்பதற்கு முன், ஒரு வீடியோவை Forward செய்வதற்கு முன், ஓர் அரசியல் தலைவரைப் பற்றி பேசுவதற்கு முன், நாம் நம்மிடம் கேட்க வேண்டிய கேள்வி: 'நான் இப்போது பேசப்போகும் வார்த்தை நல்லதா?' இல்லையெனில், மௌனம் கூட ஒரு நல்ல பதிலாக இருக்கலாம்.

முதலமைச்சரிலிருந்து மாணவர் வரை அனைவருக்கும் பொறுப்பு உண்டு. இந்த உரையாடல் கலாச்சாரத்தைக் காப்பாற்றும்



பொறுப்பு ஒரே ஒரு தரப்புக்கானது அல்ல. முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், சட்ட மன்ற உறுப்பினர்கள், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் பேச்சாளர்கள், ஊடகங்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், இளைஞர்கள், சமூக ஊடகப் பயனாளர்கள் என அனைவருக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது.

குறிப்பாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் பொறுப்பு இன்னும் அதிகம். ஏனெனில் அவர்கள் சொல்வது அவர் களுடைய தனிப்பட்ட கருத்தாக மட்டும் பார்க்கப்படுவதில்லை. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களால் கேட்கப்படுகிறது. அவர்

களுடைய மொழி பின்பற்றப்படுகிறது. அவர்களுடைய நடத்தை முன்மாதிரியாகிறது. அவர்களுடைய அரசியல் பாணி அடுத்த தலைமுறையின் அரசியல் கலாச்சாரமாக மாறுகிறது. எனவே ஒரு முதலமைச்சர் பேசும் போதும், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போதும், ஒரு சட்டமன்ற உறுப்பினர் பேசும்போதும், ஓர் அரசியல் கட்சியின் பேச்சாளர் பேசும்போதும், அவர்கள் தங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும்: ‘என் குழந்தை இந்த உரையைப் பார்த்தால், என்ன கற்றுக்கொள்ளும்?’ இந்த ஒரு கேள்வி அரசியல் மொழியின் தரத்தை மாற்றக் கூடியது.

சட்டமன்றம் தலைமுறைகளுக்கு அரசியல் நாகரிகத்தைக் கற்றுக்கொடுக்கும் பல்கலைக்கழகம். சட்டமன்றம் என்பது சட்டங்களை உருவாக்கும் இடம் மட்டுமல்ல.




அது ஓர் அரசியல் நாகரிகப் பள்ளி. அங்கே நடக்கும் விவாதங்களை மக்கள் பார்க்கிறார்கள். மாணவர்கள் பார்க்கிறார்கள். இளைஞர்கள் பார்க்கிறார்கள். அடுத்த தலைமுறை அரசியல்வாதிகள் பார்க்கிறார்கள். அதனால் சட்டமன்றத்தில் ஏற்படும் ஒவ்வொரு விவாதமும் ஒரு செய்தியை சமூகத்திற்கு அனுப்புகிறது.

எதிர்க்கட்சியை எப்படி நடத்த வேண்டும்? கருத்து வேறுபாட்டை எப்படி வெளிப்படுத்த வேண்டும்?, அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? விமர்சனத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்பதை சட்டமன்றம் ஒரு தலைமுறைக்குக் கற்றுக் கொடுக்கிறது. அதனால் அங்கே குரல் உயரலாம்; ஆனால் கண்ணியம் குறையக் கூடாது. வாதம் கடுமையாக இருக்கலாம்; ஆனால் வார்த்தைகள் கீழ்த்தரமாக இருக்கக் கூடாது.

### *உரையாடலுக்கான இஸ்லாமிய வழிகாட்டல்*

இஸ்லாத்தில் பேச்சு என்பது வெறும் வார்த்தை அல்ல. அது ஒரு பொறுப்பு. இஸ்லாம் மனிதனின் நாவுக்கு மிகப்பெரிய பொறுப்பை வழங்குகிறது. குர்ஆன் கூறுகிறது: ‘அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் பதிவு செய்யும் கண்காணிப்பாளர் அவர்களிடம் இருக்கின்றான்’ (திருக்குர்ஆன் 18:49 - கருத்து; 50:18)

ஒரு மனிதன் பேசிவிட்டு மறந்து விடலாம். ஆனால் அந்த வார்த்தை மறக்கப்படுவதில்லை. அதனால்தான் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புபவர் நல்லதைப் பேசட்டும்; அல்லது மௌனமாக இருக்கட்டும்.’

இது தனிப்பட்ட வாழ்க்கைக்கான அறிவுரை மட்டுமல்ல. இன்றைய அரசியலுக்கும் பொருந்தும். சட்டமன்றத்திற்கும் பொருந்தும். சமூக ஊடகங்களுக்கும் பொருந்தும்.

சிறந்த வார்த்தையைப் பேசுங்கள் என்பது குர்ஆனின் அழைப்பு. குர்ஆன் மனிதர்களிடம் பேசும்போது: ‘என் அடியார்களிடம் அவர்கள் மிகச் சிறந்த வார்த்தையையே பேசுமாறு கூறுவீராக’ (திருக்குர்ஆன் 17:53) என்று அறிவுறுத்துகிறது.

கவனிக்க வேண்டியது ‘வார்த்தை பேசுங்கள்’ என்று மட்டும் கூறவில்லை. ‘சிறந்த வார்த்தையைப் பேசுங்கள்’ என்று கூறுகிறது. அதாவது உண்மை பேசுவது மட்டும் போதாது. உண்மையை எப்படிப் பேசுகிறோம் என்பதும் முக்கியம். ஒரு கருத்தை எதிர்க்கலாம். ஆனால் அவமானப்படுத்த வேண்டியதில்லை. ஒரு கொள்கையை விமர்சிக்கலாம். ஆனால் மனித கண்ணியத்தை அழிக்க வேண்டியதில்லை. ஒருவரின் தவறைச் சுட்டிக்காட்டலாம். ஆனால் அவரை இழிவுபடுத்த வேண்டியதில்லை. இதுதான் இஸ்லாமிய உரையாடல் கலாச்சாரத்தின் அழகு.

### நபி(ஸல்) அவர்களின் உரையாடல்

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் வாழ்ந்த காலம் கருத்து மோதல்கள் இல்லாத காலம் அல்ல. நபிகளாரைக் கடுமையாக எதிர்த்தவர்கள் இருந்தார்கள். இகழ்ந்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஆனால் அவர்களுடைய மொழியில் மனித கண்ணியத்தை அழிக்கும் வன்மம் இல்லை.

ஒரு சந்தர்ப்பத்தில், சில யூதர்கள் நபி(ஸல்) அவர்களைச் சந்தித்து, வெளிப்படையான மரியாதையற்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். அப்போது ஆயிஷா(ரலி) அவர்கள் கடுமையாகப் பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களை அமைதிப்படுத்தி, மென்மையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். இது மிகப்பெரிய பாடம். எதிராளி நாகரிகமாக நடக்கவில்லை என்பதற்காக நாமும் நாகரிகத்தை இழக்க வேண்டியதில்லை. நமது பண்பை நிர்ணயிப்பது எதிரியின் நடத்தை அல்ல. நமது மதிப்புகள்தான்.

### தன்னை இகழ்ந்தவர்களிடமும் பொறுமை

தாயிஃப் சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில் மிக ஆழமான மனிதநேயப் பாடமாகும். நபி(ஸல்)அவர்கள் தாயிஃப் மக்களிடம் இறைவனின் செய்தியை எடுத்துச் சென்றபோது, அந்த மக்கள் இதனை ஏற்றுக் கொள்ள வில்லை. மாறாக, நபிகளாரை அவமதித்து கற்களால் தாக்கினர். நபி(ஸல்) அவர்கள் இரத்தம் சிந்திய நிலையில் திரும்பினார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கும் வாய்ப்பு அவர்களிடம் முன்வைக்கப்பட்டது. ஆனால் நபி(ஸல்) அவர்கள் பழிவாங்கலைத் தேர்ந்தெடுக்க வில்லை. அவர்களின் எதிர்காலத் தலைமுறையிலிருந்து இறைவனை வணங்கக்கூடிய மக்கள் வரலாம் என்ற நம்பிக்கையுடன் பொறுமையைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். ஆனால் இன்றைய சமூக ஊடகக் காலத்தில் இது நமக்கு என்ன சொல்கிறது? ஒருவர் நம்மை வார்த்தையால் தாக்கியவுடன் நாம் உடனடியாக அதை விடக் கடுமையான வார்த்தையால் பதிலடி கொடுக்க வேண்டுமா? இஸ்லாம் சொல்லும் பதில்: ‘இல்லை. சில நேரங்களில் பதிலடி கொடுப்பதைவிட, நமது கண்ணியத்தை காப்பது பெரிய வெற்றி’

இன்னொரு அற்புதமான உதாரணம் மூஸா (அலை), ஃபிர்அவ்ன் இடையே நிகழ்ந்த உரையாடலைக் கவனியுங்கள்.

ஃபிர்அவ்ன் யார்? அவன் அதிகாரத்தின் உச்சியில் இருந்தவன். அவன் தன்னை உயர்த்திக் கொண்டவன். மக்களை அடக்கியவன். இஸ்ராயீல் மக்களை ஒடுக்கியவன். அப்படிப்பட்ட ஒருவரிடம் அல்லாஹ் மூஸா (அலை), ஹாரூன் (அலை) ஆகியோரிடம்: ‘அவனிடம் மென்மையான வார்த்தையைப் பேசுங்கள்; அவன் நல்லுணர்வு பெறக்கூடும் அல்லது அஞ்சக்கூடும்.’ (திருக்குர்ஆன் 20:44) என்று கூறுகிறான்.

ஃபிர்அவ்ன் போன்ற கொடுங்கோலனிடம் பேசும்போது கூட மொழியின் தரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால், நம்முடன் கருத்து வேறுபாடு கொண்ட சக மனிதர்களிடம் நாம் எவ்வளவு நாகரிகமாகப் பேச வேண்டும்! வாதம் செய்யுங்கள்; ஆனால் அழகிய முறையில்! இஸ்லாம் கருத்து வேறுபாட்டைத்

**எதிர்க்கட்சியை எப்படி நடத்த வேண்டும்? கருத்து வேறுபாட்டை எப்படி வெளிப்படுத்த வேண்டும்?, அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? விமர்சனத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்பதை சட்டமன்றம் ஒரு தலைமுறைக்குக் கற்றுக் கொடுக்கிறது. அதனால் அங்கே குரல் உயரலாம்; ஆனால் கண்ணியம் குறையக் கூடாது. வாதம் கடுமையாக இருக்கலாம்; ஆனால் வார்த்தைகள் கீழ்த்தரமாக இருக்கக் கூடாது.**

தடை செய்யவில்லை. மாறாக, கருத்து வேறுபாடு ஏற்பட்டால் கூட அழகிய முறையில் விவாதிக்கச் சொல்கிறது. குர்ஆன் கூறுகிறது: 'நீங்கள் அவர்களுடன் மிகச் சிறந்த முறையில் விவாதியுங்கள்' (திருக்குர்ஆன் 16:125)

இங்கே மீண்டும் ஒரு முக்கியமான வார்த்தை இருக்கிறது. 'விவாதிக்காதீர்கள்' என்று சொல்லவில்லை. 'சிறந்த முறையில் விவாதியுங்கள்' என்று கூறுகிறது. அதாவது இஸ்லாமிய சிந்தனையில் Debate இருக்கலாம். Disagreement இருக்கலாம். Dissent இருக்கலாம். ஆனால் Disrespect இருக்கக்கூடாது. இது இன்றைய ஜனநாயகத்திற்கு மிகவும் தேவையான பண்பாகும்.

### இஸ்லாம் கூறும் நீதி

இஸ்லாத்தின் மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்று நீதி. குர்ஆன் கூறுகிறது: 'ஒரு சமூகத்தின் மீதான வெறுப்பு, உங்களை நீதியிலிருந்து விலகச் செய்ய வேண்டாம். நீதியாக இருங்கள்; அதுவே இறையச்சத்திற்கு மிக அருகில் உள்ளது.' (திருக்குர்ஆன் 5:8)

இதன் பொருள் அரசியலில் மிக ஆழமானது. நமக்குப் பிடித்தவர் தவறு செய்தால் அதை நியாயப்படுத்தக்கூடாது. நமக்கு பிடிக்காதவர் நல்லது செய்தால் அதை மறைக்கக் கூடாது.

நமது கட்சி தவறு செய்தால் அதைத் தவறு என்று சொல்லும் மனப்பான்மை வேண்டும். எதிர்க்கட்சி நல்லது செய்தால் அதை நல்லது என்று ஏற்றுக்கொள்ளும் நேர்மை வேண்டும். இதுதான் அரசியல் நேர்மை. இதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த பண்பு.

குறிப்பாக தமிழ்நாட்டின் தனித்தன்மை என்பது அதன் மொழி அல்லது உணவு அல்லது கலை மட்டும் அல்ல. அதன் அறிவு மரபும், இலக்கிய மரபும், அற மரபும், மனிதநேய மரபும் அதன் அடையாளங்கள்.

இந்த தனித்தன்மையோடு அடுத்த தலைமுறையை வளர்ப்பது நமது கடமை. அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டியது: 'நீ யாரை ஆதரிக்கிறாய் என்பது முக்கியம்; ஆனால் எப்படிப் பேசுகிறாய் என்பது அதைவிட முக்கியம்', 'நீ எந்தக் கட்சியை ஆதரிக்கிறாய் என்பது உன் உரிமை; ஆனால் மற்றவரை மனிதராக மதிப்பது உன் கடமை'

எச்சரிக்கை மணி அடிக்கிறது. இன்றைய வார்த்தை வன்மத்தை நாம் சாதாரணமாக எடுத்துக் கொண்டால் நாளைய தலைமுறையில் அது இயல்பான உரையாடலாகிவிடும். இன்று சமூக ஊடகத்தில் சொல்லப்படும் வசை நாளை பள்ளி மாணவர்களின் மொழியாக மாறலாம். இன்று அரசியல் மேடையில் பயன்படுத்தப்படும் அவமதிப்பு நாளை பொது வாழ்க்கையின் வழக்கமான மொழியாக மாறலாம். இன்று நாம் சிரித்துக் கடந்து செல்லும் ஒரு வார்த்தை நாளை ஒரு சமூகத்தின் பண்பாட்டையே மாற்றி விடலாம்.

அதனால் இது வெறும் அரசியல் பிரச்னை அல்ல. இது ஒரு பண்பாட்டு எச்சரிக்கை மணி. நாம் இப்போது விழித்துக் கொள்ளவில்லை என்றால் எதிர்காலத் தமிழ்நாட்டின் அரசியல் உரையாடல் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு நம்பிக்கையுடன் பதில் சொல்ல முடியாத நிலை உருவாகலாம்.

வார்த்தைகளில் வன்மம் வேண்டாம்; உண்மை வேண்டும். வார்த்தைகளில் வெறுப்பு வேண்டாம்; நீதி வேண்டும். வார்தைகளில் அவமதிப்பு வேண்டாம்; மனிதநேயம் வேண்டும். வார்த்தைகளில் வெற்றி பெறுவதைக் காட்டிலும், வார்த்தைகளால் ஒரு சமூகத்தை உயர்த்துவதே நமது இலக்காக இருக்க வேண்டும்.

ஏனெனில், ஒரு சமூகத்தின் நாகரிகம் அதன் கட்டிடங்களால் மட்டும் அளவிடப் படுவதில்லை; அந்தச் சமூகம் தனது எதிரியிடம் கூட எவ்வாறு பேசுகிறது என்பதாலும் அளவிடப்படுகிறது. தமிழ்நாடு மீண்டும் ஒரு கண்ணியமான உரையாடல் கலாச்சாரத்தை நோக்கித் திரும்பட்டும். அறத்தோடு பேசுவோம். நீதியோடு விவாதிப்போம். கண்ணியத்தோடு எதிர்ப்போம். மனிதநேயத்தோடு வாழ்வோம்.

# மது, போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

- மௌலவி **முஹம்மத் ஹனீஃபா** மன்பயீ
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மாநிலத் தலைவர்

*2026 ஆகஸ்ட் 20 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் சென்னை ஜமாலியா IIC அரங்கத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தின் அறிக்கை*

### மது போதைக்கு எதிரான மாநிலம் தழுவிய பரப்புரை

இன்று தமிழ்நாடு மிகப் பெரும் அளவில் குடி போதைக் கலாச்சாரத்துக்கு ஆளாகி நால்வரில் ஒருவர் குடிகாரர் என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ள சூழலில் மதுவுக்கும் போதைக்கும் எதிராக மக்கள் மத்தியில் விழிப்பு உணர்வை ஏற்படுத்துகின்ற இலக்கோடும், மக்களை குறிப்பாக இளைஞர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் ஆகஸ்ட் 15 முதல் மாநிலம் முழுவதும் மது, போதைக்கு எதிரான பரப்புரையைத் தொடங்கியிருக்கின்றோம். ஆகஸ்ட் 30 வரை இந்தப் பரப்புரை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் 23.5% ஆண்கள் குடிகாரர்களாக இருக்கின்றார்கள். இது கேரளா, கர்நாடகா, ஆந்திராவைக் காட்டிலும் அதிகம். மது உற்பத்தியிலும் மது பயன்பாட்டிலும் தமிழ்நாடு தென்னிந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. மது விற்பனையை அரசாங்கமே முன் நின்று நடத்துகின்ற அவலத்தையும் தமிழ்நாடு சந்தித்து வருகின்றது. புள்ளிவிவரங்கள் தருகின்ற சித்திரமே நெஞ்சைப் பதறச் செய்வதாக இருக்கின்றது. நம்முடைய மாநிலத்தில் நாள்தோறும் 140 கோடி ரூபாய் மது விற்பனையாகின்றது. 2025இல் மட்டும் 6.46 கோடி மது பெட்டிகள் விற்பனையாகி இருக்கின்றது.

### போதை: நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றங்கள்

போதைப் பொருட்களின் பயன்பாடு, விற்பனை குறித்து தட்டிக் கேட்பவர்களும், சுட்டிக் காட்டுபவர்களும் குறி வைக்கப்படுகின்ற அவலங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த வகையில் கோவையில் அமுதன் என்கிற கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தலித் மாணவனும், சென்னை தண்டையார்பேட்டையில் விஷ்ணு என்கிற 23 வயது நபரும், சென்னை திருவொற்றியூரில் தனுஷ் என்கிற பன்னிரண்டாம் வகுப்பு மாணவரும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த 100 நாள்களில் மட்டும் போதை தொடர்பாக 5812 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. போதைப் பொருட்கள் கடத்தல், வைத்திருத்தல், விநியோகம் ஆகிய குற்றங்களுக்காக 7214 பேர் ஐயத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். 7000 கிலோ கஞ்சா, 112 கிலோ இதர போதைப் பொருட்கள், 3.4 இலட்சம் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் தகவல்கள், புள்ளிவிவரங்கள் அனைத்துமே தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் பெருக்கத்தையும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஆபத்தையும்தாம் உணர்த்துகின்றன.

இந்த நிலையில் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக தொடர் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளையில் பள்ளி, கல்லூரி வளாகங்களில் போதைப்பொருட்கள் நுழைவதைத் தடுக்க அரசு இன்னும் தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக கல்வி நிறுவனங்களுக்கு அருகில்

போதைப்பொருள் விற்பனை நடைபெறுகிறதா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மாணவர்களை போதைப் பொருள் விற்பனையிலும் விநியோகத்திலும் ஈடுபடுத்தும் கும்பல்களைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

போதைப்பழக்கத்திற்கு ஆளான மாணவர்களுக்குத் தண்டனையை மட்டும் முன்னிறுத்தாமல் ஆலோசனை, மருத்துவ உதவி, மறுவாழ்வு நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும். மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்த போதைப்பொருள் நடவடிக்கைகளை அச்சமின்றி தெரிவிக்கும் வகையில் பாதுகாப்பான முறையில் புகார் செய்வதற்கும் தக்க உதவி அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், சமூக, கலாச்சார அமைப்புகள், இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரையும் மதுவுக்கும் போதைக்கும் எதிராக ஒன்று திரட்டி ஒரு கோடி மக்கள் வரை செய்தியைச் சென்று சேர்க்கின்ற இலக்குடனும் ஐந்து இலட்சம் பேருடைய கையெழுத்து பெறுகிற திட்டத்துடனும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் செயலாற்றி வருகின்றது.

## தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு(திருத்த) மசோதா, 2026 மீளாய்வு செய்ய வேண்டும்

தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா 2026 மிகுந்த கவலையைத் தருவதாக அமைந்துள்ளது. வந்தே மாதரம் பாடலின் சில சரணங்கள் - குறிப்பாக தாய்நாட்டை தெய்வமாகக் கொண்டாடுகின்ற, அதனை சில தெய்வங்களுக்கு இணையானதாகப் போற்றுகின்ற சரணங்கள் - இஸ்லாம் முன் வைக்கின்ற ஏகத்துவக் கோட்பாடுகளோடு சற்றும் பொருந்தாதவையாகும்.

மதச் சுதந்தரத்தோடும் மனசாட்சியின்படி எத்தகைய நம்பிக்கையையும் ஏற்றுக் கொள்ளும் சுதந்தரத்தோடும் பின்னிப் பிணைந்துள்ள ஒரு விவகாரத்தை மையமாக வைத்துக்கொண்டு சிறுபான்மை மதத்தாரின் கவலைகளைப் பன்மடங்கு பெரிதாக்குகின்ற வகையிலும் தேவையற்ற பதற்றங்களை உண்டு பண்ணுகின்ற விதத்திலும் சட்டம் ஒன்றை நிறைவேற்ற மக்களவை முனைந்திருப்பதே பெரிதும் கவலையளிப்பதாகும். வந்தே மாதரம் பாடலைப் பாடித்தான் ஆக வேண்டும் என்று இந்தச் சட்ட முன்வடிவு வெளிப்படையாகக் கட்டாயப் படுத்தவில்லை என்றாலும் இந்தப் பாடலை 'அவமதிப்பதாகவோ' அல்லது 'இழிவுபடுத்துவதாகவோ' கருதப்படத்தக்க செயல்களை குற்றச் செயல்களாக இந்தச் சட்ட முன் வடிவு ஆக்கி இருக்கின்றது. மேலும் இந்தச் சட்ட முன் வடிவில் ஆளப்பட்டுள்ள சொற்கள் தெளிவற்றவையாய், ஒருவரின் அகநிலையோடு தொடர்புள்ளவையாய் இருப்பதால் இது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான ஆபத்து அதிகமாகவே இருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட பாடலைக் கொண்டோ, அடையாளச் செயல்பாட்டைக் கொண்டோ, ஏதேனும் ஓர் முழக்கத்தைக் கொண்டோ ஒருவரின் தேசப்பற்றை அளவிட முடியாது. எனவே இந்தச் சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் உறுதியளித்துள்ள சுதந்தரங்களிலும் உரிமைகளிலும் சற்றும் சமரசம் செய்யாமலும் தேசியச் சின்னங்களைப் பாதுகாக்கின்ற வகையிலும் வெளிப்படையான சட்டப்பூர்வ உத்தரவாதங்களைக் கொண்டதாக சட்டத்தை மறுபடியும் கட்டமைக்குமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கின்றோம்.

## வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த சட்ட முன்வடிவு (FCRA)

வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா 2026 மேலதிக ஆய்விற்காக கூட்டு நாடாளுமன்றக் குழுவிற்கு (JPC) அனுப்புவதென ஒன்றிய அரசாங்கம் எடுத்துள்ள முடிவை நாங்கள் வரவேற்கின்றோம். நாடாளுமன்றக் குழு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சர்ச்சைக்குரிய இந்தச் சட்டமுடிவு தொடர்பாக எதிர்க்கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் சிறுபான்மை கல்வி, சேவை அமைப்புகளைச் சேர்ந்தவர்களுடனும் அரசியல் அமைப்புச் சட்ட வல்லுநர்கள், சட்ட மேதைகள் இன்னும் இந்த விவகாரத்தில் நேரடித் தொடர்பில் இருப்பவர்கள் என சகல

தரப்பினருடனும் கலந்துரையாடி இந்தச் சட்ட முன்வடிவின் ஒவ்வொரு பிரிவையும் உட்பிரிவுகளையும் ஒன்றன் பின் ஒன்றாக, வெளிப்படையாக மீளாய்வு செய்த பின்னரே அரசாங்கத்துக்குத் தன்னுடைய இறுதிப் பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டப்(FCRA) பதிவு ரத்து செய்யப்பட்ட அல்லது புதுப்பிக்கப்படாத நிறுவனங்களின் சொத்துகளை தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான அதிகாரத்தை அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிக்குத் தருவதற்கு வழிவகை செய்கின்ற சட்டப் பிரிவு பெரிதும் கவலையளிக்கக் கூடியதாய் உள்ளது. வெளிநாட்டுப் பங்களிப்புகள் மூலம் உருவாக்கப்பட்ட பள்ளிகள், மருத்துவமனைகள், மக்கள் சேவை, தொண்டு நிறுவனங்கள் போன்றவையும் அது போன்ற சொத்துகளில் அடங்கும். நடவடிக்



கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான தெள்ளத் தெளிவான கட்டுப்பாடுகளோ, ஈடு செய்கின்ற ஏற்பாடுகளோ (Checks and Balances) இன்றி, ஒற்றை ஒழுங்குமுறை அதிகார அமைப்பிடம் அதிகாரத்தைக் குவிப்பது, FCRA நிதியுதவி பெறும் நிறுவனங்களின் சின்னச் சின்ன நடைமுறைத் தவறுகள்கூட கடுமையான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

நம்முடைய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் நாட்டு மக்களுக்கு வழங்குகின்ற சிவில் உரிமைகளை - அரசியலமைப்புச் சட்டத்தின் 300அ பிரிவு தருகின்ற சொத்துரிமை; அதன் 14ஆவது பிரிவு தருகின்ற சமத்துவம்; 25ஆவது பிரிவு தருகின்ற மதத்தைப் பின்பற்றுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரம்; நாட்டின் வெவ்வேறு மதத்தாருக்கு அவர்கள் விரும்புகின்ற வகையில் தங்களின் விவகாரங்களையும் சொத்துகளையும் நிர்வகித்துக் கொள்வதற்காக 26ஆவது பிரிவு தருகின்ற உரிமை போன்ற சிவில் உரிமைகளை அவற்றைப் பாதுகாப்பதற்கான அரசியல் அமைப்புப் பாதுகாப்புகளையும் உத்தரவாதங்களையும் இந்த FCRA சட்டத் திருத்தம் நீர்த்துப் போகச் செய்யும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக முஸ்லிம்கள் குடியுரிமைக் கொள்கைகள் வடிவிலும், மதம், வழிபாடு, உணவு போன்ற விவகாரங்களில் உரிமை மறுப்புகளின் வடிவிலும், சொத்து உரிமை தொடர்பான விவகாரங்களின் வடிவிலும் இடைவிடாமல் பெரும் சவால்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். இப்போது இதே போன்ற தவறான கதையாடல்கள் (நரேட்டிவ்கள்) கிறித்துவ சமூகத்தை இலக்காக்கி, குறிப்பாக தேவாலயங்களும் சபைகளும் இந்தியாவின் மதரீதியான மக்கள் தொகையைத் திருத்தியமைக்க முயல்கின்றன என்கிற குற்றச்சாட்டுகள் அதிகளவில் முன்வைக்கப்படுகின்றன. என்றாலும் இவையெல்லாம் ஒரு பக்கம் இருக்க முஸ்லிம், சீக்கிய, பார்சி, கிறித்துவ நிறுவனங்கள் என ஏராளமான மதச் சிறுபான்மை அமைப்புகள், தொண்டு நிறுவனங்களும் சாதி மத பாகுபாடின்றி ஏழை எளிய நலிந்த பிரிவினருக்கு சேவையாற்றி வருகின்றார்கள்.

பல தலைமுறைகளாய் கல்வி, மருத்துவம், மக்கள் சேவை என எல்லாத் தளங்களிலும் அளப்பரிய பங்களிப்பை இடைவிடாமல் வழங்கி வருகின்றார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. வெளிநாட்டுப் பங்களிப்புகளை ஒழுங்குபடுத்துகிற நடவடிக்கை சட்டப்பூர்வமான மதச் செயல்பாடுகளையோ மனித நேயப் பணிகளையோ ஒடுக்குவதற்கான அரசின் அரசியல் கருவியாக மாறிவிட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் செயல்பாடுகள் உண்மையான நாடாளுமன்ற ஆய்வுக்கும் அர்த்தமுள்ள கலந்தாலோசனைக்கும் வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

குடிமைச் சமூகத்தையும், மதச் சுதந்திரத்தையும், மக்கள் சேவைகளையும், அரசியல் அமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளிக்கின்ற

பாதுகாப்புகளையும் பாதிக்காதவாறு, நிதியுதவியில் வெளிப்படைத்தன்மையையும் பதில் சொல்கின்ற பொறுப்பு உணர்வையும் உறுதிசெய்யும் ஓர் ஒழுங்குமுறை கட்ட மைப்புதான் இந்தியாவிற்குத் தேவை.

### கல்வி: கவலையளிக்கும் கள நிலவரம்

கடந்த 2025-26 கல்வியாண்டில் மட்டும் நாட்டில் 4791 பள்ளிக்கூடங்கள் மூடப்பட் டிருக்கின்றன. ஒரு நாளுக்கு 13 பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை Unified District Information System for Education Plus (UDISE+) வெளியிட்டுள்ள தகவல்தான் இது. 2014இலிருந்து 2025 வரையிலான பத்தாண்டுகளில் நாடு முழுவதும் 94000 பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன. ஒரு நாளுக்கு 25 பள்ளிக்கூடங்களை இழுத்து மூடி யிருக்கின்றோம். வல்லரசு ஆக வேண்டும் என்கிற பேச்சும் கனவும் ஒரு பக்கம். பள்ளிக் கூடங்களை மூடிக் கொண்டிருக்கின்ற அவலம் மறுபக்கம்.

அதே சமயம் தனியார் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையும் அவற்றில் சேர்கின்ற மாண வர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 23 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது எனில் அவற்றில் சேர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 40 விழுக்காடு வளர்சசியைக் கண்டிருக்கின்றது. 2023-24 கல்வியாண்டில் 9 கோடியாக இருந்த மாணவர் களின் எண்ணிக்கை 2023 - 25 கல்வியாண்டில் 9.89 கோடியாக வளர்ந்து உள்ளது.

தேசிய அளவிலான நிலைமை இப்படி யிருக்க, நாடு விடுதலை அடைவதற்கு முன்பே சாமான்யர்களுக்கும் எளிய மக்களுக்கும் பள்ளிக் கல்வியைச் சாத்தியப்படுத்திய பாரம்பர் யத்தைக் கொண்ட தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 208 அரசுப் பள்ளிகளும் 114 நிதியுதவி பெறு கின்ற பள்ளிகளும் மூடப்பட்டிருக்கின்றன.

இது ஒரு புறம் இருக்க, இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்தில் செயல்பட்டு வரு கின்ற 422 பொறியியல் கல்லூரிகளுக்கான சேர்க்கைக்கான இரண்டு சுற்று சேர்க் கைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 23 கல்லூரிகளில் சேர்க்கை பூஜ்யமாகத் தேங்கி நிற்கின்றது. 167 கல்லூரிகளில் பத்து விழுக்காடு சேர்க்கை மட்டுமே நடந்து உள் ளது. 44 கல்லூரிகளில் மட்டுமே 90 விழுக் காடு சேர்க்கை நடந்துள்ளது. 65 கல்லூரிகளில் 80 விழுக்காடு சேர்க்கை முடிந்துள்ளது.

பள்ளிக்கூடங்கள் மூடப்படல், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்களுக்கான நல்கைகள் நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருதல், கல்வித்துறையே அதிவேகமாக வணிகமயமாகி வருகின்ற அவலம், சிறுபான்மை கல்விக்கும் கல்வி உதவித் தொகைக்கும் ஒதுக்கப்படுகின்ற நிதி மீண்டும் மீண்டும் குறைக்கப்படுதல் கல்விக்கும் வேலை வாய்ப்புக்கும் இடையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இடைவெளி ஆகிய அனைத்தும் கல்வித்துறையின் திசை, முன் னுரிமைகள், நிர்வாகம் ஆகியவற்றை ஒருங் கிணைந்த அனைத்தையும் தழுவிய ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தையே உணர்த்துகின்றன.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் GDP கல்விக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை 6 விழுக்காடாக உயர்த்தியும், கல்வி உதவித் தொகை, கல்விக்கு ஆதரவளிக்கின்ற நல் கைகள் போன்றவற்றை மீண்டும் மீட்டெடுத் தும், அரசு பள்ளிக்கூடங்களையும் பொது பல்கலைக்கழகங்களையும் வலுப்படுத்தியும், கல்வி நிறுவனங்கள் அனைத்தும் எந்தவித மான பக்கச் சார்பின்றியும் நீதியுடனும் நடத் தப்படுவதை உறுதி செய்தும், தேர்வு, சேர்க் கைக்கான கட்டமைப்பை மாற்றியமைத்தும், வேலைவாய்ப்பை உருவாக்குதலுடனும் நாளுக்கு நாள் புதிதாக வளர்ந்தோங்கி வரு கின்ற தொழில்நுட்பங்களுடனும் இயைந்து போவதாய் கல்வியை ஆக்கியும், கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியையும் கல்விச் சுதந்தரத்தையும் பாதுகாத்தும், பரந்த, கலந் தாலோசித்தலின் அடிப்படையில் கல்விக் கொள்கைகளை மீளாய்வும் மறுகட்டமைப்பும் செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

# 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

TRUST WORTHY

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# ஐயத்தில் உழல்பவர்கள்

**இதற்கு முன்போ அவர்கள் அதனை நிராகரித்துவிட்டிருந்தார்கள். மேலும் உண்மையான அறிவில்லாமல், புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட தூரமான விஷயங்கள் குறித்து கற்பனைகளைக் கூறிக் கொண்டிருந்தார்கள்.[75] அந்நேரத்தில் எவற்றிற்காக இவர்கள் ஆசைப் பட்டுக் கொண்டிருப்பார்களோ அவற்றைவிட்டு இவர்கள் தடுக்கப்பட்டு விடுவார்கள்; இவர்களுக்கு முன்னர் இவர்களைப் போல் வாழ்ந்தவர்கள் தடுக்கப்பட்டதைப் போல! திண்ணமாக இவர்கள் வழிகெடுக்கும் பெரும் ஐயப்பாட்டில் வீழ்ந்து கிடந்தார்கள்.[76]**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 53, 54**

**75.** நபிகளாரின் மீதும் நபிகளாரின் போதனைகள் குறித்தும், இறைநம்பிக்கையாளர்கள் பற்றியும் நிராகரிப்பாளர்கள் விதவிதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டிருந்தார்கள். ஓங்காரக் குரல் எழுப்பி கவனத்தைத் திருப்புவார்கள். வாசகங்களை நீட்டியும் வெட்டியும் வகைவகையான வசைகளைச் சொல்வார்கள். சில சமயம் இந்த மனிதர் ஒரு சூனியக்காரர் என்பார்கள். சில சமயம் இவர் ஒரு பைத்தியக்காரர் என்பார்கள். சில சமயம் ஏகத்துவக் கோட்பாட்டை ஏகடியம் செய்து கெக்கலிப்பார்கள். சில சமயம் மறுமை பற்றி மனம் போன போக்கில் வாய்க்கு வந்ததைச் சொல்வார்கள். சில சமயம் இறைத்தூதருக்கு வேறு எவரோ ஒருவர் வந்து கற்பிக்கின்றார்; போதிக்கின்றார் என்று கதை அளப்பார்கள். மேலும் சில சமயம் இந்த மக்கள் தங்களின் முட்டாள்த்தனத்தால்தான் நபிகளாரைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்று இறைநம்பிக்கையாளர்கள் குறித்து விமர்சிப்பார்கள்.

**76.** உண்மையில் சொல்லப் போனால் இணைவைப்பு, இறைமறுப்பு, மறுமை மறுப்பு போன்ற கோட்பாடுகளை எந்தவொரு மனிதரும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் மேற்கொள்வதில்லை. அவ்வாறு அவர்களால் அசைக்க முடியாத நம்பிக்கையை இந்தக் கோட்பாடுகளின் மீது வைக்கவும் முடியாது. ஏனெனில் யாதொன்றின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை அதனைப் பற்றிய நேரடி அறிவின் அடிப்படையில்தான் நிலைபெறும். மேலும் எந்தவொரு மனிதருக்கும் இறைவன் இல்லை என்பது பற்றியோ, ஒன்றுக்கு மேற்பட்ட பல கடவுள்கள் இருக்கின்றார்கள் என்பது பற்றியோ, இறைவனின் அதிகாரங்களில் ஏராளமானோரின் தலையீடு இருக்கின்றது என்பது பற்றியோ, மறுமை ஒருபோதும் நடக்காது என்பது பற்றியோ நேரடி அறிவு இல்லை.

உலகத்தில் இந்தக் கோட்பாடுகளை மேற்கொண்டுள்ளவர்கள் அனைவருமே வெறுமனே கணிப்புகள், ஊகங்கள் ஆகியவற்றின் மீதுதான் ஒரு கட்டிடத்தைக் கட்டியெழுப்பி இருக்கின்றார்கள். அதன் உண்மையான அடித்தளமும் ஐயத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. இந்த ஐயம் தான் அவர்களை மிக மிகக் கடுமையான வழிகேட்டின் பக்கம் இழுத்துச் சென்றிருக்கின்றது.

அவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது ஐயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஏகத்துவக் கோட்பாட்டின் உண்மைநிலை குறித்து ஐயம் ஏற்பட்டது. மறுமைநாள் வரும் என்பதில் அவர்கள் ஐயங்கொண்டார்கள். எது வரையெனில் அவர்கள் இந்த ஐயங்களைத் தங்களின் இதயங்களில் அசைக்க முடியாத நம்பிக்கையைப் போன்று நங்கூரமிட்டு அமர்த்தி வைத்துக்கொண்டவாறு இறைத்தூதர்கள் எடுத்துரைத்த எந்தவொரு செய்தியையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. மேலும் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் முற்றிலும் தவறான பாதையில் கழித்து முடித்து விட்டார்கள்.

*(அத்தியாயம் 34 ஸபா நிறைவுற்றது)*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# பூமியின் அரசர்கள் எங்கே?

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் மறுமை நாளன்று பூமியைத் தன்னுடைய கையில் எடுத்துக் கொள்வான். வானத்தைத் தன்னுடைய வலது கையில் சுருட்டிக் கொள்வான். பிறகு கூறுவான்: 'நான்தான் அரசன். பூமியின் அரசர்கள் எங்கே போனார்கள்?'**

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)
நூல் : புகாரி

இந்த நபிமொழியில் இறைவனின் மகத்துவமும் மகோன்னதமும் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் இதனை மக்கள் அதிகமாக உணர்ந்திருப்பதில்லை. ஆனால் மகத்துவமும், பெருமையும், வல்லமையும் இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உரித்தானவை என்பதை மறுமை நாளன்று இந்த உலகம் உணர்ந்து கொள்ளும். அப்போது இந்த வானமும் பூமியும் அனைத்தும் இறைவனின் பிடியில் இருப்பதை மக்கள் கண்கூடாகப் பார்ப்பார்கள். பூமி அவனுடைய கையில் இருக்கும். வானங்களையோ கைக்குட்டையைப் போன்று அவன் சுருட்டி தன்னிடம் வைத்திருப்பான். ஒவ்வொரு பொருளின் மீதும் அவனுடைய ஆதிக்கம்தான் முழுமையாக இருக்கும்.

இறைவன் அல்லாதவர்களும் அதிகாரமும் ஆட்சியும் கொண்டவர்களாய் வலம் வர முடியும் என்கிற தவறான கருத்திலிருந்து குறுமதியாளர்கள் விடுபடுவார்கள். உலகத்தில் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தவர்கள் அந்த நாளில் வாய் திறப்பதற்கும் திராணி இல்லாமல் திகைத்துப் போய் நிற்பார்கள். 'நான்தான் மன்னன். நான்தான் அரசன். உலகத்தில் மன்னர்களாக, அரசர்களாக வலம் வந்தவர்கள் எங்கே?' என்று இறைவன் கேட்பான்.

மகத்துவம் மிக்க குர்ஆனிலும் 'இந்த மக்கள் அல்லாஹ்வை எவ்வாறு மதிக்க வேண்டுமோ, அவ்வாறு மதிக்கவேயில்லை. (அவனுடைய நிறைவான வல்லமையின் நிலை என்னவெனில்) மறுமைநாளில் பூமி முழுவதும் அவனின் கைப்பிடியில் இருக்கும். மேலும், வானங்கள் அவனுடைய வலக்கையில் சுருட்டப்பட்டு இருக்கும். அவன் தூய்மையானவன்; உயர்ந்தவன்; இம்மனிதர்கள் செய்யும் இணைவைப்புச் செயல்களை விட்டு!' (திருக்குர்ஆன் 39:67)

இந்த உலகத்தில் எவருக்கேனும் அதிகாரம் கிடைக்கின்றதெனில் அதனைக் கொண்டு மனம் போன போக்கில் நினைத்ததைச் செய்து முடிக்கின்ற அதிகாரமாக அவர் நினைத்து விடக் கூடாது. தம்முடைய அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் இறைவனின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், இந்தப் பூமியை அனைத்து விதமான அக்கிரமங்களி லிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுவிப்பதும் மக்களின் நலனுக்காக, நன்மைக்காக அவர்களின் வள வாழ்வுக்காக திட்டங்கள் வகுத்து நடைமுறைப்படுத்துவதும், ஏழை எளிய மக்கள், தேவையுள்ளவர்கள் போன்றோரின் தேவைகளை நிறைவேற்றுகிற பணியில் முழுக் கவனம் செலுத்துவதும், இறைவனின் மகத்துவம், வல்லமை குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பதும்தாம் அவர் மீதான கடமைகளாகும்.

தாமும் இறைவனுக்கு முன்னால் பணிந்து இருப்பதும், அவனுடைய பிடியில் சிக்கிவிடுகின்ற ஆபத்து, விசாரணை குறித்த அச்சம் ஆகியவற்றால் எந்நேரமும் பதற்றத் தோடும் தவிப்போடும் இருப்பதும் அவசியமாகும்.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

# முடக்கப்பட்ட நாடாளுமன்றம்

**- சேயன் இப்ராகிம்**


**2026 ஜூலை 20ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஆகஸ்ட் 13ஆம் தேதி முடிவடைந்துள்ளது. இந்த 24 நாள்களிலும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முறையாகச் செயல்படவில்லை. மிகவும் திட்டமிட்டு ஆளும் கட்சியான பாஜக நாடாளுமன்றத்தை முடக்கி விட்டது.**

பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் நாடாளுமன்றத்திற்கு வரவே இல்லை. பொதுவாக பிரதமர் நாடாளுமன்றத்திற்கு வருவதைக் கடந்த 12 ஆண்டுகளாகத் தவிர்த்தே வருகிறார். உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்து கொண்டிருந்தார். ஆனால் இம்முறை நாடாளுமன்றத்திற்கு வருவதை முற்றிலும் தவிர்த்து விட்டார்.

இந்தக் கூட்டத் தொடரின் போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் டெல்லியில் பேராடிய மாணவர்கள் மீது காவல்துறையினர் நடத்திய மிருகத்தனமான தாக்குதல்கள் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. Foreign Contribution Regulation Act(FCRA) எனப்படும் இந்தியாவில் செயல்படுகின்ற தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வருகின்ற நிதியைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டத்தையும் எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாக எதிர்த்தன. இது பற்றி விவாதிக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை அவைத் தலைவர்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

இதனால் எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு நாளும் இந்தப் பிரச்னையைக் கிளப்புவதும், அதன் மீது விவாதம் நடத்த சபாநாயகர் அனுமதி மறுப்பதும், எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடுவதும், அதனால் சபையை ஒத்திவைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நாடாளுமன்றம் தொடங்கிய நாளன்று கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் ஒன்றிய அரசு நடத்துகின்ற போட்டித் தேர்வுகளில் நடைபெறுகின்ற முறைகேடுகளைக் கண்டித்தும், இந்த முறைகேடுகளுக்குத் தார்மிகப் பொறுப்பேற்று ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டுமென்றும் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டம் நடத்தினர்.

மாணவர்கள் தொடர்ந்து பல நாள்களாகவே அதே இடத்தில் போராடி வருகின்றனர். ஜூலை 20ஆம் தேதி இந்தப் போராட்டம் தீவிரமடைந்தது. கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் மாணவர்களுடன் பிற இயக்கங்களைச் சார்ந்த மாணவர்களும்






கலந்து கொண்டனர். இதனால் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் திரண்ட மாபெரும் போராட்டமாக அது மாறியது. தங்களது போராட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்கள் நாடாளுமன்றம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர். கைகளில் எந்தவிதமான ஆயுதங் களுமின்றி அமைதியான முறையில் நாடாளு மன்றம் நோக்கிச் சென்ற மாணவர்கள் மீது டெல்லி காவல்துறையினர் கண்மூடித் தனமாகத் தாக்குதல் நடத்தினர்.

பெல்லட் குண்டுகளும் மாணவர்கள் மீது பயன்படுத்தப்பட்டன. மாணவிகளும் தாக்குதல்களுக்கு உள்ளாயினர். பெல்லட் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதன் காரண மாக சில மாணவர்களின் கண் பார்வை போய் விட்டது. டெல்லி காவல்துறை ஒன்றிய உள்துறை அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பதால், மாணவர்கள் மீதான இந்தக் கோரமான தாக்குதல்களுக்கு உள்துறை பொறுப்பிலிருக்கும் அமித்ஷா பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின. மாணவர்களின் முக்கிய கோரிக்கையான ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கையையும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

நிலைமை கை மீறிப் போவதை உணர்ந்து கொண்ட ஒன்றிய அரசு தர்மேந்திர பிர தானை பதவி விலகுமாறு பணித்தது. அவரும் பதவி விலகினார். மாணவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது. கடந்த 12 ஆண்டுகளில் மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு எந்தவொரு பாஜக அமைச்சரும் தார்மிகப் பொறுப்பேற்று இதுவரை பதவி விலகவில்லை. இப்போதுதான் நிகழ்ந்துள் ளது. இது பாஜக ஆட்சிக்கு விழுந்த பலமான அடி என்றே கூறலாம்.

அதே நேரத்தில் மாணவர்களின் மீதான தாக்குதல்களுக்குத் தார்மிகப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை எழுப்பினால், அதை எதிர்கொள்ள வேண்டிய திருக்கும் மாணவர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலளிக்க வேண்டி வரும் என்று கருதியே அல்லது பயந்தே அமித்ஷா நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.

மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் உள்துறை அமைச்சர் அமித்ஷா சபைக்கு வர வேண்டும், வந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திய ததால் அவைத் தலைவரான சி.பி. இராதா கிருஷ்ணன், எதிர்க்கட்சிகளின் இந்தக் கோரிக் கையை உள்துறை அமைச்சரிடம் தெரிவிக்க வேண்டுமென்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் கிரன் ரிஜுஜுவிடம் கேட்டுக் கொண்டனர். ஆனால் அதற்கும் பலன் இல்லை. மாறாக ரிஜுஜு, எந்த அமைச்சர் அவைக்கு வர வேண்டும், எந்த அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என்பதையெல்லாம் எதிர்க்கட்சிகள் தீர்மானிக்க முடியாது என ஆணவமாகப் பேசினார்.

நாடாளுமன்றத்திற்கு வருகை தர வேண் டியது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் கடமை. நாடாளுமன்ற உறுப்பினரான ஒன் றிய அமைச்சர் அங்கு வருவதுதானே முறை, கடமை. ஆனால் அவர் அவைக்கு வர வேண் டும் என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றன. என்ன விசித்திரம்? நான் எங்கும் ஓடி ஒளியவில் லையென்றும், நாடாளுமன்ற வளாகத்தில் இருக்கும் தனது அறையில் இருந்து கொண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பார்த்து வருவதாகவும், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாகவே அங்கு வரவில்லையென்றும் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். என்ன விநோதமான வாதம் இது?

இந்தக் கூட்டத் தொடரிலேயே FCRA எனப்படும் வெளிநாட்டுப் பண வரத்தைக் கட்டுப்படுத்தும் மசோதாவை எப்படியும் சட்டமாக்கி விட வேண்டுமென்று பாஜக அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டது. இந்த மசோதாவில் அதிகம் பாதிக்கப்படுவது நாட்டிலுள்ள கிறித்தவத் தொண்டு நிறுவனங் களே. எனவே இந்த மசோதாவை கிறித் தவ அமைப்புகள் கடுமையாக எதிர்த்தன. வடகிழக்கு மாகாணங்களிலுள்ள பாஜக

*நாடாளுமன்ற உறுப்பினரான ஒன்றிய அமைச்சர் அங்கு வருவதுதானே முறை, கடமை. ஆனால் அவர் அவைக்கு வர வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றன. என்ன விசித்திரம்?*

முதல்வர்களும் இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தினர். எனவே நிலைமையின் கடுமையை உணர்ந்து கொண்டு காலம் தாழ்த்தும் ஒரு வாய்ப்பாகக் கருதி இந்த மசோதாவை நாடாளுமன்றத்தின் ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறது ஒன்றிய அரசு.

பெரிதும் வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட தொகுதி வரையறை மசோதா இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படவில்லை. கடந்த ஏப்ரல் மாதத்தில் தோற்கடிக்கப்பட்ட இந்த மசோதாவை எப்படியும் மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்ற பாஜக அரசு பெரும் முயற்சிகள் மேற்கொண்டது. எனினும் மூன்றில் இரு பங்கு ஆதரவு கிடைக்க வாய்ப்பில்லை என்று கருதியோ என்னவோ அந்த மசோதாவை அரசு கொண்டு வரவில்லை. இந்த சட்ட மசோதா விஷயத்தில் திமுக முன்னர் எடுத்த நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை என்ற செய்தி ஆறுதல் அளிக்கிறது.

சந்தடி சாக்கில் அமளி துமளிகளுக்கிடையே அரசு 12 மசோதாக்களைத் தாக்கல் செய்து அவற்றை நிறைவேற்றியுள்ளது. இதில் முக்கியமான மசோதா தேசியப் பாடலான வந்தே மாதரத்தை அவமதித்தால் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்ற மசோதாவாகும். இந்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய திமுக உறுப்பினர் ஆ.இராசா, இந்தப் பாடலும் இந்துத்துவா தலைவர் சாவர்க்கருமே நாட்டுப் பிரிவினைக்குக் காரணம் எனப் பேசிய போது ஆளும் தரப்பிலிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. காங்கிரஸ் கட்சி அந்த மசோதாவுக்குப் பெருமளவு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே வந்தேமாதரம் பாடலின் ஆறு பத்திகளையும் பாட வேண்டுமென ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. முதல் இரண்டு பத்திகளைத் தவிர, மற்ற நான்கு பத்திகளிலும் இந்துக் கடவுள்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலேயே இந்தப் பாடல் குறித்துச் சர்ச்சை ஏற்பட்டு, அதன் இரண்டு பத்திகளை மட்டும் பாடினால் போதுமானது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இன்றைய பாஜக அரசு 100 ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழக்கத்தை மாற்றியுள்ளது.

மொத்தத்தில் நாடாளுமன்றத்தில் இந்த மழைக்காலக் கூட்டத்தொடர் உருப்படியான முறையில் எந்தப் பிரச்னை குறித்தும் விவாதிக்காமல் முடிந்து போயுள்ளது.

பொதுவாக நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள்தான் முடக்குவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாகவே ஆளும் பாஜக அதனை முடக்குகின்ற அனைத்து வழிகளிலும் செயல்பட்டு வருகிறது. பிரதமரையும் உள்துறை அமைச்சரையும் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கே எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்த வேண்டியதிருக்கிறது. என்ன அவலம் இது? நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு இது ஒரு கெட்ட காலமே!

குறிப்பு : 15.8.2026 அன்று விடுதலை தினத்தை முன்னிட்டு டெல்லியிலுள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் தேசியக் கொடி ஏற்றப்படுவதற்கு முன்னர், வந்தே மாதரம் பாடல் முழுமையாகப் பாடப்பட்டது. அப்பாடலை முழுமையாகப் பாட விடாமல் சோனியா காந்தி தடுத்து விட்டார் என்று ஊடகங்களில் வந்த செய்தியை காங்கிரஸ் கட்சி மறுத்து முழுமையாக அப்பாடல் பாடப்பட்டது என அறிக்கை வெளியிட்டுள்ளது. எனவே காங்கிரஸ் கட்சி இதுவரை கடைப்பிடித்து வந்த நடைமுறைக்கு மாறாக இந்தப் பாடல் விஷயத்தில் நடந்து கொண்டுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

# நல்லறங்களும் சமுதாயத்தின் தற்போதைய நிலைமையும்

● சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி

● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

**இந்த விரிவான விவாதம் சமுதாயத்தின் தற்போதைய பரிதாப நிலைக்கான ஒரு முக்கியமான காரணத்தை அடையாளம் காட்டுகிறது. முன்னேறிய சமூகங்களோடு ஒப்பிடும் போது நல்லறங்களில் (ஸாலிஹான அமல்களில்) தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டே இருக்க விரும்புகின்ற பண்பும் மும்முரமாக, முழுமூச்சாக துடிப்போடு இயங்குகின்ற பாங்கும் நிறைந்த சமுதாயச் சூழல் நம்முடைய சமுதாயத்தில் மிகவும் பலவீனமடைந்து இருக்கின்றது என்பதில் எந்த ஐயமும் இல்லை.**

**செயல்துடிப்பும் மும்முரமாக, முழுமூச்சாக இயங்குகின்ற தனிமனிதர்கள் சமுதாயத்திலும் இருக்கிறார்கள் என்பதிலும் அவர்களின் தீரமும் தொலைநோக்கும் நிறைந்த நடவடிக்கைகளால் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் அசாதாரணமான அளவுக்கு நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்பதிலும் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. என்றாலும் முதலாவதாக இந்த மாதிரியான சாதனை மனிதர்கள் மிக மிகக் குறைவான எண்ணிக்கையில்தாம் இருக்கின்றார்கள்.**

இரண்டாவது முக்கியமான விஷயம் என்னவெனில் அவர்களின் இந்தச் சாதனைகளும் பங்களிப்புகளும் அவர்களின் சொந்தச் சாதனைகளாகத்தான் இருக்கின்றன. நன்மையான காரியங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கிற கூட்டுச் சூழல் சமுதாயத்தில் மிகவும் பலவீனமாகத்தான் இருக்கின்றது.

முந்தைய தொடரில் ஸாலிஹான அமல்கள் நிறைந்த சமுதாயம் என்கிற தலைப்பின் கீழ் ஒரு துடிப்புமிக்க, செயல் ஊக்கம் நிறைந்த சமுதாயத்தின் சித்திரம் தரப்பட்டிருந்ததல்லவா? இன்றைய இந்திய இஸ்லாமிய சமுதாயத்தில் அந்தச் சித்திரத்தின் சுவடு கூட மிகக் குறைவாகத்தான் காணப்படுகின்றது என்பதுதான் யதார்த்தம். இதற்குப் பின்புலத்தில் மிகவும் ஆழமான, உளவியல் பூர்வமான, வரலாற்று ரீதியான காரணங்களும் ஓரளவுக்குக் கோட்பாட்டு அடிப்படையிலான காரணங்களும் இருக்கின்றன.

நம்மைப் பொறுத்தவரை இந்தப் பரிதாபமான நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற பாரம்பர்யத்தைக் கொண்டாடுகின்ற பழமைவாதப் போக்குதான் முதல் காரணமாகும். பொதுவாக மக்கள் மத்தியில் காணப்படுகின்ற, 'ஈடேற்றம் பெறுவதற்கு ஈமான் மட்டுமே போதும்; அல்லது முஸ்லிமாக இருந்தால் மட்டுமே போதும்' என்கிற சிந்தனையையும் கருத்தோட்டத்தையும் குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஈருலக வெற்றிக்கும் ஈடேற்றத்துக்கும் கட்டாயமான நிபந்தனையாக அறிவுறுத்தப் பட்டிருக்கின்ற ஸாலிஹான அமல்களைப் பற்றிய முக்கியத்துவம் மங்கிப் போய் இருப்பதும் இந்தப் பழமைவாதப் போக்கின் வெளிப்பாடாகச் சொல்லலாம்.

இரண்டாவது வெளிப்பாடாக, நல்லறங்களில் ஈடுபடுகின்ற மனிதனின் இயல்பான உந்துதலும், உணர்வும் நன்மைக்கான சில வழிபாட்டுச் சடங்குகள் அளவுக்கு குறுக்கப்பட்டிருப்பதைச் சொல்லலாம். புண்ணியம் என்பதற்கு மிக அதிக எண்ணிக்கையில் நஃபில் தொழுகைகளைத் தொழுவதும், அதிகமான உம்ராக்களை மேற்கொள்வதும்தாம் என்கிற புரிதல் ஏற்பட்டுள்ளது.

இன்ஃபாக் - இறைவழியில் செலவிடுதல் என்பதற்குப் பொருள் பள்ளிவாசல்களைக் கட்டுவதும், அவற்றை அழகுபடுத்துவதும், அவற்றின் வசதிகளை அதிகப்படுத்துவதும்தாம் என்றும், ஸதகா என்பதன் பொருள் யாசிப்பவர்களின் ஜோல்னாப் பைகளில் சில்லறை நாணயங்களைப் போடுவது என்றும் பொருள் கொண்டிருக்கின்றார்கள். இங்கு இந்த நல்லறங்களைக் குறைத்து மதிப்பிடுவது நோக்கமன்று.

திண்ணமாக இந்த நல்லறங்கள் அனைத்துமே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவைதாம். என்றாலும் ஸாலிஹான அமல்களைப் பற்றிய கருத்தோட்டத்தை இந்த ஒரு சில அமல்கள் அளவுக்குக் குறுக்கிவிடக் கூடாது என்பதே நம்முடைய நோக்கம். இவ்வாறு குறுக்குவது இஸ்லாத்தின் நோக்கமும் அல்ல. இது இஸ்லாத்தின் கருத்தோட்டங்களோடு இயைந்து போவதுமில்லை. சிந்தனை அளவில் அறிவார்ந்த அடிப்படையில் எவருமே நல்லறங்களின் வட்டத்தை இப்படிக் குறுகிய வட்டத்துக்குள் அடைத்து விடுவதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் நடைமுறையில் நாம் பார்க்கின்ற சமுதாய நிலைமையை ஆய்வு செய்கின்ற போது இது போன்ற குறுகிய கண்ணோட்டம் முஸ்லிம் சமுதாயத்தில் ஊறிப் போய் இருப்பதை உணர முடிகின்றது.

மேலே குறிப்பிட்ட பரிதாபமான நிலைமைக்கான காரணம் வீழ்ச்சியின் விளைவாக சமூகங்களில் தோன்றி பல்கிப் பரவுகின்ற சோம்பலையும் செயல்பாட்டின்மையையும் தீரமின்மையையும் தேக்கத்தையும் முடக்கத்தையும் சொல்லலாம். பெரும்பாலான முஸ்லிம்களின் காலைப் பொழுதுகள் மிகவும் தாமதமாகத்தான் தொடங்குகின்றன. நள்ளிரவைத் தாண்டி பயனற்ற அரட்டைகளில் நேரத்தை விரயமாக்கும் அமர்வுகள் எல்லா ஊர்களிலும் விதிவிலக்கின்றி காணப்படுகின்றன.

நன்மையான காரியங்களைக் குறித்து கனவு கண்டு, சிந்தித்து, வியூகம் வகுத்து, சாதித்து முடிக்கின்ற தீரமும் உறுதியும் மருந்துக்கும் காணப்படவில்லை. கடை, தொழில், வணிகம் ஆகியவற்றை முடித்த பிறகு எஞ்சி இருக்கின்ற நேரத்தின் பெரும் பகுதி பயனற்ற விவகாரங்களில்தான் வீணாகின்றன. எவரிடமாவது ‘சமுதாய அக்கறை’ பொங்கி எழுகின்ற போது அது சமுதாயத்தின் நிலைமை பற்றிய ஒப்பாரியாக, எந்த விளைவையும் ஏற்படுத்தாத வரவேற்பறை விமர்சனக் கணைகளாக, ஆவேசமான குற்றச் சாட்டுகளாகத் தான் வெளிப்படுகின்றது. இதனால் அவர்களுக்கு ஏதோ ஒரு வகையான மன திருப்தி கிடைக்கலாம். ஆனால் சமுதாயத்திற்கு எந்தப் பயனும் கிடைப்பதில்லை.



இன்னும் சிலர் ஏதேனுமொன்றைச் செய்ய வேண்டும் என்கிற துடிப்புடன் களம் இறங்கினாலும் பாரம்பர்யமான, சடங்குத்தனமான பணிகளுக்கு அப்பால் அவர்களின் பார்வை செல்வதற்கு அவர்களின் மனமும் இடம் தருவதில்லை; உணர்வும் உந்தித் தள்ளுவதில்லை. இது போன்ற சமூகச் சூழல் உண்மையில் செயல்களை வேரறுக்கின்ற சூழல் ஆகும். இது போன்ற செயல் பாடின்மை சமூகத்தைப் பாழ்படுத்துவதற்கும் அதன் பின்னடைவுகளுக்கும் மிக முக்கியமான காரணமாகும்.

மூன்றாவது காரணம் இந்திய முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள மாறுபட்ட சூழல்களையும், அவற்றை எதிர்கொள்வதற்காகப் பல்லாண்டுகளாக அவர்கள் கையாண்டு வருகின்ற அரதப் பழசான எதிர்வினைகளையும் சொல்லலாம். பாதுகாப்பு பற்றிய அச்ச நிலை, எந்நேரமும் எதிர்கொள்ளும் ஆபத்துகள், பயம் நிறைந்த சூழல், ஆவேசத்தைக் கிளறச் செய்கின்ற தொடர் உசுப்பல்கள், உணர்வுகளைக் கொப்பளித்து ஆத்திரப்பட வைக்கிற பிரச்னைகள் சங்கிலித் தொடராய் நீண்டு கொண்டே செல்லுதல்.

இவை அனைத்தும் பல்லாண்டுகளாக எதிர்வினையாற்று

வதிலும் தற்காப்பு நடவடிக்கைகளிலும் மட்டுமே அவர்களை எந்த அளவுக்கு அமிழ்த்தி வைத்திருக்கின்றது எனில் அவர்களின் கூட்டு உளவியலிலேயே தற்காப்பு மனோபாவமே மிகைத்துள்ளது. இந்த நிலையில் தீர்க்கமான, ஆக்கப்பூர்வமான, நீண்டகால நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவர்களுக்கு இயலாத காரியமாய் ஆகியுள்ளது.

நான்காவது காரணம் ஒத்துழைப்பும் பின்புலத்தில் ஆதரவளிக்கும் சூழலும் போதிய அளவுக்கு இல்லாமல் போனதாகும். இது குறித்து இதற்கு முந்தைய தொடரில் சுட்டிக்காட்டி இருக்கின்றோம். இந்த நிலையில் எதுவுமே செய்யாமல் இருப்பதும் மௌனமாக முடங்கிக் கிடப்பதும் மிக எளிதானதாகவும் விருப்பத்திற்குரியதாகவும் ஆகிவிட்டது. இப்படி இருக்கின்ற மனிதர் ‘கண்ணியமான மனிதர்’ என்று மதிக்கப்படுகின்றார். இப்படிப்பட்டச் சூழலில் எவரேனும் ஒருவர் ஏதேனுமொன்றைச் செய்து சாதிப்பதற்காகக் களம் இறங்கினாலோ அவர் விதவிதமான சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்கின்றார்.

அவருடைய பணிகள் ஐயத்துடன் பார்க்கப்படுகின்றன. திட்டங்கள் வெற்றி பெறும் போதோ அவை பொறாமைக்கும் போட்டிக்கும் வித்திடுகின்றன. தோல்விகளோ கண்டனங்களுக்கும் நிந்தனைகளுக்கும் காரணமாகின்றன. பல்வேறு மஸ்லக்குகள், மத்ஹப்கள், மக்தப்கள் என்கிற பாகுபாடுகளும் கூட நன்மையான காரியங்களை வெறுப்புக்கண் கொண்டு பார்க்க வைத்து விடுகின்றன. மற்றவர்கள் செய்கின்ற எந்தவொரு நல்ல வேலையும் கண்களுக்குப் படுவதே இல்லை. ஒத்துழைப்பு அளிக்க மறுப்பதற்கும் அதற்கும் மேலாக எதிர்த்துக் களமாடுவதற்கும் ஆயிரம் சாக்குப் போக்குகள் பட்டியலிடப்படுகின்றன.

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற உணர்வு மற்ற சமூகங்களோடு ஒப்பிடும் போது முஸ்லிம்களிடம் மிக அதிகமாகவே இருக்கின்றது. (கோவிட் பெருந்தொற்று காலத்தில் இது வெளிப்பட்டது). இன்ஃபாக் - செலவிடுகின்ற பண்பும் மற்ற சமூகத்தாரை விட முஸ்லிம்களிடம் அதிகமாகவே இருக்கின்றது. ஆனால் மேலே சொன்ன காரணங்களால் நீடித்து நிற்கின்ற, பெரும் அளவிலான, மகா திட்டங்களை நிறைவேற்றுவதில் சுணக்கம் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட சூழலே உருவாகவில்லை. நிறுவனங்களின் எண்ணிக்கையும் போதுமானவையாய் இல்லை. அவை பலவீனமானவையாயும் இருக்கின்றன. புதுமையாக யோசித்து திட்டமிட்டு சாதிக்கின்ற உணர்வோ எழுச்சியோ இல்லை. குறிப்பாக நன்மையான பொதுநலக் காரியங்களில் ரிஸ்க் எடுத்து புதுப் புது முயற்சிகளை செய்வதற்கான திராணியோ தீரமோ இல்லை.

இந்திய முஸ்லிம்களின் கூட்டு நடத்தையைச் சீர்ப்படுத்துவதற்காகக் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களில் அதிமுக்கியமானதாக நாம் கருதுவது ‘ஸாலிஹான அமல்களைச் செய்ய வேண்டும், அதிகமதிகமான நன்மையான பொது நலக் காரியங்களில் ஈடுபட வேண்டும் என்கிற செயல் துடிப்பும், அவற்றுக்கான தொடர் முயற்சிகளும் நிறைந்த சமூகச் சூழலை உருவாக்குவதைத்தான்’.

நம்முடைய இளைஞர்களிடம் இந்த உணர்வையும் துடிப்பையும் உருவாக்கி மும்முரமாக, சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருப்பவர்களாக, பயனுள்ள, நன்மையான, பொது நலக் காரியங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்கின்ற ரசனையையும் சிந்தனையையும் எண்ணத்தையும் உறுதியையும் ஏற்படுத்துவதற்காக போர்க்கால அடிப்படையில் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இதன் மூலமாகத்தான் கொடுமையையும் கொடுமையாளர்களையும் தடுத்து நிறுத்துவதும் சாத்தியமாகும். சமூகம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, அறிவு, சித்தாந்தம் என அத்துணைக் களங்களிலும் புதுப் புதுத் தலைமைகள் உருவாகி வளர்வதும் சாத்தியமாகும். சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் அது அதிகாரம் பெறுவதும் நடக்கும்.

*(நிறைவு)*

# திமுகவின்
# விதை நெல் நிலைக்குமா?

**- புதுமடம் ஜாபர் அலீ**

## விஜயின் தேர்தல் வியூகம்

இளைஞர்களை மையமாகக் கொண்டு சமூக வலைதளங்கள் வழியாக முதல் முறை வாக்களிப்பவர்களை ஈர்த்து அவர்கள் மூலம் குடும்ப வாக்குகளையும் கவரும் வியூகத்தை விஜய் முன்னெடுத்தார். சாதி, மத அரசியலைக் கடந்து அனைவருக்குமான தலைவராக தன்னை முன்னிறுத்திய அவர் பெண்கள், சிறுபான்மையினர், எளிய சமூகத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஆதரவைப் பெற்றார். திமுகவை பிரதான அரசியல் எதிரியாகவும், பாஜகவை சித்தாந்த எதிரியாகவும் அடையாளப்படுத்திய விஜய் பிற எதிர்க்கட்சிகளுடன் நேரடி மோதலைத் தவிர்த்து, ஆளும் அரசுக்கு எதிரான அதிருப்தி வாக்குகளை ஒருங்கிணைக்கும் நுட்பமான தேர்தல் வியூகத்தை முன்னெடுத்தார்.

## ஸ்டாலின் வியூகம்

தமிழ்நாட்டு அரசியலில் திமுகவின் வெற்றிக்கு அடித்தளமாக இருந்தது அதன் சித்தாந்த அரசியல் மட்டுமல்ல; உறுதியான கூட்டணியும் ஆகும். சிறுபான்மையினர், பட்டியலின மக்கள், திராவிட சிந்தனையை ஆதரிப்போர், பாஜக எதிர்ப்பு மனநிலையுடைய வாக்காளர்கள் இணைந்து உருவாக்கிய நிலையான வாக்கு வங்கியே திமுகவின் விதை நெல் எனக் கருதப்படுகிறது. இந்த உறுதியான வாக்கு வங்கியே தேர்தலுக்குத் தேர்தல் திமுகவுக்கு ஆரம்பகட்ட முன்னிலையை வழங்கிய முக்கிய பலமாக இருந்து கிட்டத்தட்ட 20 விழுக்காடு உறுதியான வாக்கு அடித்தளத்தை உருவாக்கியதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இந்த அரசியல் கணக்கை அடிப்படையாகக் கொண்டே திமுக, பாஜக எதிர்ப்பை தனது முதன்மை அரசியல் அடையாளமாகத் தொடர்ந்து முன்னிறுத்தியது. மதச்சார்பின்மை, சமூக நீதி, மாநில சுயாட்சி, மொழி உரிமை, கூட்டாட்சி ஆகிய கோட்பாடுகளை பாஜக எதிர்ப்பு அரசியலுடன் இணைத்து மக்களிடம் எடுத்துச் சென்றது. இதன் மூலம் பல்வேறு சமூகம், தமிழ்நாடு சார்ந்த அரசியல் சக்திகளை



ஒரே அரசியல் தளத்தில் ஒருங்கிணைப்பதில் திமுக வெற்றி பெற்றது.

அண்மைக்காலமாக திமுகவின் அரசியல் அணுகுமுறையில் சில மாற்றங்கள் தென்படுவதாக அரசியல் வட்டாரங்களில் விவாதங்கள் எழுகின்றன. குறிப்பாக தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான விவகாரத்தில் ஒன்றிய அரசுடன் நேரடி மோதலைத் தவிர்க்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக எதிர்காலத்தில் திமுக பாஜக இடையே அரசியல் கூட்டணிக்கான வாய்ப்பு உருவாகுமா என்ற ஊகங்களும் பரவி வருகின்றன.

இதற்கிடையில் நடிகர் விஜயின் அரசியல் வருகை தமிழக அரசியலில் புதிய தேர்தல் வியூகத்தை உருவாக்கியுள்ளது. குறிப்பாக இளைஞர்கள், முதல்முறை வாக்களிப்போர், மாற்றத்தை எதிர்பார்க்கும் வாக்காளர்கள் மத்தியில் புதிய அரசியல் ஆர்வம் உருவாகி உள்ளது. இதனால் இதுவரை பாஜக எதிர்ப்பை மையமாகக் கொண்டு திமுகவுடன் இருந்த சில வாக்காளர்கள் மாற்று அரசியல் வாய்ப்புகளைப் பார்க்கத் தொடங்கியுள்ளனரா என்ற கேள்வியும் எழுகிறது.

திமுக ஆட்சிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள், நிர்வாக வெளிப்படைத்தன்மை இல்லாமை, அதிகார மையப்படுத்தல், அரசின் செயல்திறன் குறித்த விமர்சனங்களும் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள் சட்டரீதியாக நிரூபிக்கப்பட வேண்டியவை என்றாலும், அரசியல் ரீதியாக மக்களின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சங்களாக மாறுகின்றன.

இன்றைய வாக்காளர்கள் வெறும் சித்தாந்த அரசியலை மட்டும் அல்லாமல் நல்லாட்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி, முதலீடு, வளர்ச்சி, ஊழலற்ற நிர்வாகம் ஆகியவற்றையும் இணைத்தே அரசுகளை மதிப்பிடுகின்றனர். இதன் பின்னணியில் முக்கியமான அரசியல் கேள்வி ஒன்று எழுகிறது. பாஜக எதிர்ப்பை மட்டுமே மையமாகக் கொண்டு திமுக தனது பாரம்பரிய வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா? புதிய அரசியல் சூழலுக்கு ஏற்ப தனது தேர்தல் உத்தியை மாற்ற வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளதா?

**எதிர்வரும் தேர்தல்களில் தமிழக அரசியல் யார் பாஜகவை எதிர்க்கிறார்கள்? என்ற கேள்வியைத் தாண்டி யார் நல்லாட்சியையும் வெளிப் படையான நிர்வாகத்தையும் வளர்ச்சியையும் மக்களுக்கு நம்பிக்கையுடன் வழங்குகிறார்கள்? என்ற கேள்வியை மையமாகக் கொண்டு நகரக் கூடும்.**

பாஜக எதிர்ப்பு திமுகவின் சித்தாந்த அடையாளமாக இருந்தாலும், மாறிவரும் வாக்காளர் மனநிலை கட்சிகளை புதிய அரசியல் மொழியையும் புதிய அணுகுமுறையையும் நோக்கித் தள்ளுகிறது. எதிர்வரும் தேர்தல்களில் தமிழக அரசியல் யார் பாஜகவை எதிர்க்கிறார்கள்? என்ற கேள்வியைத் தாண்டி யார் நல்லாட்சியையும் வெளிப்படையான நிர்வாகத்தையும் வளர்ச்சியையும் மக்களுக்கு நம்பிக்கையுடன் வழங்குகிறார்கள்? என்ற கேள்வியை மையமாகக் கொண்டு நகரக் கூடும்.

அதிலும் முக்கியமாக தமிழக வாக்காளர்களில் சுமார் 62% இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இந்த வாக்காளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டு தங்களது அரசியல் உத்தியை மறுவடிவமைக்கும் கட்சிகளே எதிர்கால அரசியலில் முன்னிலை பெறும். அதனால் திமுகவின் பாரம்பரிய விதை நெல் வாக்கு வங்கி மாறாமல் தொடருமா, அல்லது மாறிவரும் வாக்காளர் மனநிலையால் அதில் விரிசல் ஏற்படுமா என்பதே 2026ஆம் ஆண்டு தமிழக அரசியலின் முக்கிய கேள்வியாக உருவெடுத்துள்ளது.



# நாட்டை சீரழிக்கும் போதைப் பொருள் பயன்பாடு

• அ.மெஹராஜ்

நாட்டின் வளர்ச்சியைத் தடுத்து சீர்கேட்டிற்கு வித்திடும் போதைப் பொருள் இன்று உலக அளவில் மிகப்பெரும் ஆபத்தாக உருவெடுத்துள்ளது. சமூகத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் ஆபத்தான போதைப் பழக்கத்தால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சீரழிவது மிகவும் கவலைக்குரியது.

நாட்டின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தீர்மானிக்கக் கூடிய மாணவர்கள், இளைஞர்கள் கல்வி அமைப்பை உருவாக்கு வதிலும், சமூகவியலிலும், தகவல் தொழில் நுட்பவியலிலும் மிகப் பெரும் வல்லுநர்களாக உருவாக வேண்டிய அவசியம் உள்ளது. அவர்கள் இந்த நாட்டின் பிரச்னைகளையும் தீமைகளையும் அகற்று வதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டு நாட்டை அமைதி, நீதி மிக்க சமூகத்தை உருவாக்குபவர்களாக மாற்ற வேண்டும்.

இத்தகைய கடமை வாய்ந்த மாணவர் சமூகம் போதைப் பொருட் களின் பிடியில் சிக்கி வீழ்ச்சியின் திசையில் சென்று கொண்டிருக் கிறது. போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான எத்தனையோ சட்டங்கள் இருந்தாலும் போதை முற்றாக ஒழிய வில்லை.

போதைப் பொருள் பயன்பாடு பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் கிடைப்பதற்கான சூழல் உருவாகி இருப்பது மிகவும் ஆபத்தானது. நட்பு வட்டாரத்திலிருந்து தொடங்கி குடும்ப உறுப்பினர்கள், பொது மக்கள் வரை இதன் பாதிப்பை அனுபவிக்கின்றனர். பல கொடிய நோய்களைப் பரப்பி

**போதைப் பொருட்களைக் குடியிருப்புப் பகுதிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் விற்பனை செய்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். போதைக் கலாச்சாரத்தை முற்றிலுமாக ஒழிக்க அரசுடன் சேர்ந்து அனைவரும் களத்தில் இறங்கிச் செயல்பட வேண்டும்.**





**போதையை ஒழிப்போம்.. சிறந்த நாளை உருவாக்குவோம்!**

சமூகத்தின் ஆரோக்கிய வாழ்வைச் சீரழித்து விடுகிறது.

## போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்கும் நடவடிக்கைகள்

இந்தியாவில் மாணவ இளைஞர்களின் மக்கள் தொகை அபாரமானது. உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையில் அதாவது 54 விழுக் காடினர் 29 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் மது, போதை பொருட்களுக்கு அடிமையாக உள்ளனர். மது, போதைக் கலாச்சாரத்தில் மாணவர்கள் வீழ்ந்து விடாமல் இருப் பதற்கான புறச் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

போதைப் பொருட்களைக் குடியிருப்புப் பகுதிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் விற்பனை செய்கின்றவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும். போதைக் கலாச்சாரத்தை முற்றிலுமாக ஒழிக்க அரசுடன் சேர்ந்து அனைவரும் களத் தில் இறங்கிச் செயல்பட வேண்டும். போதை யில்லாச் சமூகத்தை உருவாக்க நமது வருங் காலத் தலைமுறைக்கும் நாம் வழிகாட்ட வேண்டும்.

பெற்றோர், ஆசிரியர் அரவணைப்பு குறையும் போது போதைப்பொருள் பயன் பாடு மாணவர்களிடம் அதிகரிக்கின்றது. திரைப்படங்களில் காட்டப்படும் ஆபாசம், போதைப் பொருள் காட்சிகள் மாணவர்களைத் திசை திருப்புகின்றது.

எந்தவித சிரமத்திலும் சிக்கி விடாமல் மகிழ்ச்சியை மட்டும் அனுபவிக்க போதையை ஒரு முறை சுவைத்து அதனை வாழ்நாள் மகிழ்ச்சியாக நினைத்து தன்னைத்தானே இழந்து விடும் சூழலை பள்ளி மாண வர்களிடம் பார்க்க முடிகிறது. நல்ல பிள்ளைகள் கூட இதனால் சிக்கித் தவித் துக் கொண்டிருக்கின்றனர். கல்விச் சூழலையே மிகக் கடினமாகக் கருதி கல்வி கற்பதிலிருந்து விடுபட போதைப் பழக்கத் திற்கு அடிமையாகி வருகின்றனர்.

பள்ளி கழிவறையில் ரகசிய இடத்தில் போதைப் பொருளைப் பயன்படுத்துகின்ற னர். போதையின் உச்சத்தால் மாணவிகளுக் குத் தொல்லை கொடுக்கத் தொடங்கி விடு கின்றனர். எத்தனை முறை ஆசிரியர்களும் பெற்றோர்களும் கண்டித்தாலும் இதன் விளைவு அதிகரிக்கின்றன தவிர கட்டுப்படு வதில்லை.

## ஒழுக்கக் கட்டுப்பாடு

மாணவ மாணவிகளின் முதல் கல்வி ஒழுக்கமே! அது சிறுவயதிலிருந்தே அவர் களுக்கு ஊட்டப்பட வேண்டும். கல்வியின் கடினச் சூழலை மாற்றி இலகுவை ஏற்படுத்தி அதன் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியரும் தன் பிள்ளைகளின் ஒழுக்க நெறிகளைக் கவனத்தில் கொண்டு முன்மாதிரி பெற் றோராக, ஆசிரியராகத் திகழும் போது நிச்சயம் பிள்ளைகள் தவறான பாதையில் தடுக்கிக் கூட விழமாட்டார்கள். ஒவ்வொரு பகுதி மக்களும் தங்கள் பகுதியில் தவறான போதைப் பொருள் விற்பனைகளோ, பயன்பாட்டையோ கண்டால் அந்தப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து அத்தீமையைக் களைய முற்பட வேண்டும்.

பஸ் நிலையம், இரயில் நிலையம், பள்ளி, கல்லூரி அருகில் உள்ள கடை வீதிகள் ஆகிய பொது இடங்களில் போதைப் பயன்பாடு நிகழாமல் இருக்க காவல் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக் கைகள் மேற்கொள்ள வேண்டும். சமூக



வலைதளங்களின் ஆபாசக் காட்சிகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும்.

### அரசுக்கும் மக்களுக்கும் பொறுப்பு

அரசின் தலையாயக் கடமை எனக் கருதி போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்கு வதன் முதல் ஆயுதமான மதுக் கடைகளை முழுவதும் மூட வேண்டும். போதைப் பொருள் தடுப்பு முற்றிலும் ஒழிக்க முடியாதது அல்ல அதன் விழிப்பு உணர்வு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் தொடங்க வேண்டும்.

### போதையை ஒழித்து அமைதி பெற..!

இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்தால் அமைதி கிட்டும் என்பதே இஸ்லாத்தின் அடிப்படை விதியாகும். அமைதியைக் குலைக்கும் காரணங்களை அறிந்து அவற்றுக்கான தீர்வுகளை மனிதர் களைப் படைத்த இறைவனே வழிகாட்டு கிறான். மனிதனை அடிமைப்படுத்தும், சிறுமைப்படுத்தும் அனைத்து விஷயங்களி லிருந்தும் அவனுக்கு விடுதலை அளிப்பது தீமையிலிருந்து விலகி வாழ்வதே என்று இறைவனின் தூதர் நபிகள் நாயகம்(ஸல்) கூறியுள்ளார்கள்.

மது, போதைப் பயன்பாட்டிலிருந்து மக்க ளைத் தடுக்க ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் மது விலக்கை நிலை நாட்டிய வரலாற்றைப் படிக்க வேண்டும். எவ் வாறு இது நிகழ்ந்தது? மக்களை உளவியல் ரீதியாக மாற்றியமைத்தது இஸ்லாம்.

உள்ளங்களில் ஒழுக்கச் சிந்தனையை ஊட்டி மதுவை முற்றிலும் ஒழிக்க வைத்தது சிந்தனை மாற்றமே! அரசாங்கமே மதுக்கடை களைத் திறந்து மது அருந்துங்கள் என்று சுதந் திரம் கொடுத்தாலும் மதுவின் வாடையைக் கூட நுகர்ந்திடாத சமூகத்தை உருவாக்கியது என்பதற்கு வரலாறு சான்று அளிக்கிறது.


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com




**நூல்:** போதை - அழிவின் பாதை

**ஆசிரியர்:** Dr. J. முஹையுதீன், M.B.B.S., M.S., M.Ch.

**வெளியீடு:** இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT)
138, பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - 600012.
அலைப்பேசி: 8668057596

**பக்கங்கள்:** 86 **விலை:** ரூ. 75

# போதை அழிவின் பாதை

போதை என்பது மதுவை மட்டும் குறிப்பதல்ல. மனிதனின் அறிவை மயக்கி, சிந்தனையைச் சிதைத்து, நல்வழியிலிருந்து விலக்குகின்ற எந்தப் பொருளும் அது திரவ மாகவோ, திடப்பொருளாகவோ, மாத்திரை யாகவோ, ஊசியாகவோ, வேறு எந்த வடி விலோ இருந்தாலும் அனைத்தும் போதையே! மனிதகுலத்தை அழிவின் விளிம்பிற்குத் தள் ளும் பேராபத்தான ஆயுதம் போதை.

ஒருவன் போதைப்பொருளுக்கு அடிமை யானவுடன் அவன் சமூகத்தில் எத்தகைய உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவனது அறிவு மங்கிவிடுகிறது; சுயநினைவை இழக் கின்றான்; இழிவான சொற்களை உதிர்க்கின் றான்; பிறரை இகழ்ந்து பேசுகின்றான்; சச்சர விலும் வன்முறையிலும் ஈடுபடுகின்றான்; ஒழுக்கச் சீரழிவில் வீழ்கின்றான். இவ்வாறு எண்ணற்ற தீமைகளுக்குக் காரணம் போதை. அதனால்தான் இறைத்தூதர் முஹம்மது நபிகள்(ஸல்) அவர்கள், ‘மது தீமைகளின் தாய்’ என்று எச்சரித்தார்கள்.

காலப்போக்கில் போதை குறித்து சமூகத் தின் பார்வையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. போதை இல்லாத தமிழ்நாடு என்ற முழக்கத்தை முன்வைக்கும் அரசே மதுக் கடைகளை நடத்துவது மிகப் பெரிய முரண் பாடாகும். நாளைய இந்தியாவின் சிற்பிகளாகத் திகழ வேண்டிய இளம் தலைமுறையினர், போதைப் பொருள்களை மகிழ்ச்சிக்கும் கொண் டாட்டத்திற்குமான கருவியாகக் கருதும் ஆபத் தான மனப்போக்கில் வேகமாகச் சிக்கி வருவது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது.

இந்நிலையில் போதையின் இன்றைய அவலநிலை, போதையும் உடல் நலமும், சமூக விளைவுகள், போதையிலிருந்து மீள முடியுமா?, போதைக்கு எதிரான போர், மது விலக்கு சாத்தியமா?, இஸ்லாமியப் பார் வையில் போதை ஒழிப்பு ஆகிய முக்கியத் தலைப்புகளில் உரிய ஆதாரங்களுடனும் தெளிவான விளக்கங்களுடனும் இந்நூலின் ஆசிரியர் டாக்டர் முஹையுதீன் எளிமையாக வும் ஆழமாகவும் எடுத்துரைக்கிறார்.

இளைஞர்கள் ஏன் இந்தப் போதைப் புதை குழியில் சிக்குகின்றனர்? போதைப் பொருள்கள் தனிமனிதனின் உடல்நலம், மன நலம், குடும்ப வாழ்க்கை, சமூக ஒற்றுமை, பொருளாதார முன்னேற்றம், தேசிய வளர்ச்சி ஆகிய அனைத் துத் துறைகளிலும் ஏற்படுத்தும் பாதிப்புகளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் விளக்குகிறார்.

போதையின் தீமைகளை எடுத்துரைப்ப தோடு நின்றுவிடாமல் அதன் அழிவுப் பாதை யிலிருந்து விடுபடுவதற்கான நடைமுறை மாற்று வழிகளையும் முன்வைக்கிறார். குறிப் பாக பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் மனித குலத்தைப் போதையின் பிடியிலிருந்து எவ்வாறு மீட்டெடுத்தது என் பதை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் எடுத்துக்காட்டி இன்றைய சமூகத்திற்குப் பின்பற் றத்தக்க முன்மாதிரியையும் வழங்குகிறார்.

போதைப் பழக்கத்தை ஒழிப்பது தனி மனிதனின் பொறுப்பு மட்டுமல்ல; அது ஒட்டு மொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப் பாகும் என்பதையும் வலியுறுத்தி இந்நூலை நிறைவு செய்கிறார்.

மனிதர்களை போதையின் பேரழிவி லிருந்து மீட்டெடுக்க உதவும் சிறந்த வழி காட்டியாக விளங்கும் இந்நூலை இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளை(IFT) மிகச் சிறப்பாக வெளியிட்டுள்ளது. ஆண்களும், பெண்களும், குடும்பத் தலைவர்களும், குறிப்பாக இளம் தலைமுறையினரும் தவறாமல் இந்த நூலை வாசித்துப் பயனடைவதுடன் இதனைப் பரவ லாக்கவும் வேண்டும்.

**– K. ஜலாலுதீன்**

# ஒரு மணி அடித்தால்..!

• B. ரியாஸ் அகமது

பரபரப்பாக ஆபீஸ் கிளம்பிக் கொண்டிருந்தேன். ஷூவை மாட்டிக் கொண்டிருக்கும் போது மொபைல் ஒலித்தது. புதிய நம்பர். யாராக இருக்கும் என்ற யோசனையில் தலை சாய்த்து பேசத் தொடங்கினேன்.

'.. தானே பேசுறது?'

'ஆமா நீங்க?'

'எஸ்பி ஆபிஸ்ல இருந்து பேசுறேன்'

'என்ன சார் விசயம்?'

இரண்டு உரையாடல்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தாலும் அந்த மில்லி செகண்ட் நேரத்தில் உள்ளத்தில் மூன்று, நான்கு கேள்விகள் தோன்றி மறைந்தன. மூளை எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்று பிரமித்தேன்.

'ஒன்னுமில்ல சார் ஒரு சின்ன என்கொயரி.. நேர்ல வர முடியுமா?'

'சார் இன்னைக்கு ஆபீஸ் வேலையா வெளில போறேன். நாளைக்கு வரவா?'

'ஓகே சார்' எவ்வித ஆட்சேபனையும் இன்றி அவர் ஒப்புக் கொண்டது வியப்பாக இருந்தது.

'சார் உங்க பேரு?'

பேச்சை நீட்டித்தால் அழைப்புக்கான காரணம் தெரிய வரலாம். பதற்றம் ஒரு பக்கம் இருந்தாலும் நிதானம் ஒரு பக்கம் என சமாளித்தேன்.

'.. ... டிபார்ட்மென்ட்'

பெயருடன் தனது டிபார்ட்மென்ட்டையும் கூறினார்.

சமூகப் பணிகளில் ஈடுபடுவதால் போலீஸ் அறிமுகம் ஓரளவு இருந்தாலும் இப்படியொரு அழைப்பை இப்போதுதான் முதன் முறையாக எதிர்கொள்கிறேன். உடன் பயணிக்கும் இயக்க உறுப்பினர்கள் இத்தகைய சம்பவங்களைக் கூறியது என் நினைவில் வந்தது.

'..ஆபீஸ்லதான வேலை பாக்றீங்க? உங்கள பார்த்திருப்பேன் சார்'

'ஏதாவது நிகழ்ச்சில பாத்திருப்பீங்க சரி சார், நாளைக்கு வந்திடுறேன்'

ஃபோனை வைப்பதற்கு முன் என்னைக் குறித்த இன்னும் சில தகவல்களைக் கூறி, அந்த அதிகாரி தனது பணித் திறமையை வெளிப்படுத்தினார்.

உங்களைப் பற்றி எங்களுக்கு எல்லாமே தெரியும் என்று அவர் சொல்லாமல் சொன்னது புரியாமல் இல்லை. இது கூடத் தெரியவில்லையென்றால் இந்த டிபார்ட்மென்டில் இருந்து என்ன பிரயோஜனம் என்று எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

ஃபோனை வைத்துவிட்டு மனைவிக்கு விடை கொடுத்து வீட்டை விட்டுக் கிளம்பத் தயாரானேன்.

'யாருங்க ஃபோன்ல?' கிச்சனில் இருந்தபடியே கேள்வி எழுப்பினாள்.

'கிளையண்ட்' என்று இயல்பாகப் பதில் வெளிவந்தது.

விவரத்தைச் சொன்னால் அவளும் குழம்பிக் கொண்டிருப்பாள். என்கொயரி என்று அழைத்து அப்படியே பிடித்து வைத்து விட்டால்.. இதைப் போன்று எத்தனை சம்பவங்களைக் கேள்விப் பட்டிருப்பேன். எதிர்மறைச் சிந்தனைகள் மனதை ஆட்கொண்டன.

ஆபீஸை நோக்கி பைக் சென்று

கொண்டிருந்தாலும் மனம் எங்கெங்கோ அலை பாய்ந்தது. எதற்காக டிபார்ட்மென்டில் இருந்து அழைத்தார்கள்? டிபார்ட்மென்ட்ல இந்த விங் இப்பதானே திறந்தாங்க? நம்மள எதுக்குக் கூப்பிடுறாங்க? என்ன என்கொயரி? அதை ஃபோனிலேயே கேட்டிருக்கலாமே? நேரில் அழைத்து என்ன கேட்பார்களோ? கடந்த வாரம் அரசின் திட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோமே.. அதைக் குறித்துக் கேட்பார்களோ? இதே போன்று வேறு யாரையெல்லாம் அழைத்தார்களோ?

இன்டர்வியூவில் கூட நான் இத்தனை கேள்விகளை எதிர்கொண்டது கிடையாது. ஒரு கேள்விக்கு பதிலைத் தேடும் முன்னரே மனம் அடுத்த கேள்விக்குத் தாவியது.

பைக்கை நிறுத்தி விட்டு ஆபிசுக்குள் வேகமாகச் சென்றேன். பயோமெட்ரிக் வைக்கும் போது மொபைல் சிணுங்கியது. புதிய எண். யாராக இருக்கும்? மீண்டும் கேள்விகளால் துளைத்தது மனம். டிபார்ட்மெண்டாக இருக்குமோ?

‘ஹலோ’

‘சார் கம்பெனில இருந்து பேசுறேன். லெவன் ஓ கிளாக் மீட்டிங் கன்ஃபார்ம் சார்’

‘ஓகே வந்துடுறேன்’

மொபைல் அடித்த போது எகிறி அடித்த இதயத் துடிப்பு இன்னும் இயல்பு நிலைக்கு வரவில்லை.

நாற்காலியில் அமர்ந்து தண்ணீர் குடித்தேன்.

‘என்ன டென்ஷனா இருக்க? வழக்கமான கிளையண்ட் மீட்டிங் தானே ஸ்மூத்தா முடியும்’ என்றான் பக்கத்து சீட்டில் இருந்த நண்பன்.

‘ம்’

மனம் இன்னும் இயல்பாகவில்லை.

கடந்த வார ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட யாருக்காவது ஃபோன் போட்டு கேட்கலாமா? வேண்டாம். நாமே ஏன் பரபரப்பை ஏற்படுத்த வேண்டும்? முக்கிய விசயம் என்றால் அவர்களே சொல்லியிருப்பார்களே!

சமூகக் களத்தில் பல ஆண்டுகள் பயணித்தாலும் இந்த அழைப்பு என் இயல்பை மாற்றியது.

சரியான நேரத்திற்கு மீட்டிங்குக்குச் சென்றேன். எல்லாம் சுமூகமாக முடிந்தது. ஆனால் ஆழ் மனதில் உருவான அச்சம்




கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிப்பதை உணர்ந்தேன்.

என்கொயரி முடிந்து விட்டு விட்டாலும், நண்பர்களும் பக்கத்து வீட்டுக்காரர்களும் என்னிடம் இயல்பாகப் பேசுவார்களா? என்னதான் ஐ.டி. கம்பெனியில் சீனியர் போஸ்டில் இருந்தாலும் போலீஸ் விசாரணை என்றால் பயம் இல்லாமலா இருக்கும்?

‘ஏண்டா, அழகா எக்ஸ்பிளைன் பண்ணுன அத மூஞ்ச கொஞ்சம் ஒழுங்கா வச்சிட்டு சொல்லலாம்ல?’ என்று கடிந்து கொண்டான் உடன் வந்த நண்பன்.

கடந்த வார ஆர்ப்பாட்டத்திற்கு இவனும் வந்திருந்தான். போராட்டத்தை ஒருங்கிணைத்ததே இவன்தான். இவனுக்கு போலீஸ் அழைப்பு வரவில்லை என்பதை அவனின் இயல்பான நடவடிக்கைகள் மூலம் புரிந்து கொண்டேன். அவனிடம் கேட்காமல் நம்மை ஏன் அழைத்தார்கள்? இல்லையென்றால் இவனுக்கு இதெல்லாம் பழகிவிட்டதோ? மீண்டும் கேள்விகள்.

சரி எதற்கும் கேட்போம் என்று அவனிடம் விவரத்தைக் கூறினேன்.

'எதுக்கு இப்படி தேவையில்லாத வேலை பார்க்குறானுங்க?' என்று சற்று கோபம் கொண்டவன், 'சரி, போகும் போது சொல்லு. நானும் வர்றேன்' என்றான். சமூகப் பணிகளில் தன்னைவிட மூத்தவன் என்பதால் அவன் வருவதாகச் சொன்னது ஓரளவுக்கு ஆறுதலாக இருந்தது.

மதியம் சாப்பிடும் போது மீண்டும் ஒரு புதிய எண்ணில் இருந்து அழைப்பு. இப்போது யார்? இப்போதே வரச் சொல்வார்களோ? கேள்விகளின் பட்டியல் அணிவகுத்தது.

'ஹலோ'

'சார் ...பேங்க்ல இருந்து பேசுறோம். லோன் வேணுமா?'

எதிர் முனையில் உள்ளவர் அடுத்த வார்த்தைக்குச் செல்லும் முன், 'வேண்டாம் மேடம்' என்று சொல்லி துண்டித்தேன்.

சாப்பிட்டு முடித்தவுடன் மீண்டும் ஃபோன் ஒலித்தது. பதற்றத்துடன் ஃபோனை எடுத்தேன். மனைவியின் பெயரைப் பார்த்தவுடன் சற்று ஆசுவாசம் கொண்டேன்.

'என்னங்க சாப்டீங்களா?'

'ம்'

'புது டிஷ் எப்படி இருந்துச்சு?'

'நல்லா இருந்துச்சு'

'டேஸ்ட் புடிச்சிருந்துச்சா?'

'ஆமா சரி வைக்கிறேன்' என்று ஃபோனை வைத்தேன்.

சாதாரண உணவை வைத்தாலே இரண்டு நிமிடம் புகழ்பவன் இன்று சம்பிரதாயமாகப் பேசியது மனைவிக்கு ஆதங்கத்தையும் எரிச்சலையும் கொடுத்திருக்கும். ஏதோ ஆசிரியர் - மாணவன் போல் ஓர் உரையாடல்.

'சாப்டிய்யா என்று ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை. என்னாச்சு இவருக்கு?' என்று மனைவி குழம்பிக் கொண்டிருந்தாள்.

இயந்திரத்தனமாக ஆபீசில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் காலையில் வந்த அழைப்பைச் சுற்றியே மனம் வலம் வந்தது.

வேலை முடிந்து கிளம்பும் போதும் உற்சாகம் இன்றியே கிளம்பினேன். 'இவனுக்கு என்னடா ஆச்சு? சொல்லாம கிளம்பிட்டான்' என்று நண்பர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொண்டனர்.

'காலைல டீல் கன்ஃபார்ம் ஆயிட்டில்ல அந்தப் பெருமைல போறாண்டா' என்று ஒருவன் தன் பங்கிற்கு நேரம் பார்த்து இளக்காரமாகப் பேசினான்.

வீட்டை நெருங்கும் போது ஒரு புதிய எண்ணில் இருந்து அழைப்பு. மீண்டும் பதற்றம். மனதில் கேள்விகளின் அணிவகுப்பு.

'ஹலோ'

'என்னண்ணே... இன்னைக்குக் கடை திறக்கலையா?'

'ராங் நம்பர். நம்பரப் பார்த்து ஃபோன் போடுங்க' என்று எரிச்சலுடன் பதில் அளித்து அழைப்பைத் துண்டித்தேன். இப்படியெல்லாம் பேசும் குணம் கிடையாதே என எனக்குள் கேட்டுக் கொண்டேன்.

வீட்டில் மனைவி இன்முகத்துடன் வரவேற்க என் மனமோ எஸ்.பி. ஆபிஸில் இருந்தது.

‘என்ன டல்லா இருக்கீங்க? மீட்டிங்ல ஏதும் பிரச்னையா? மதியம் பேசும் போது கேட்க முன்னாடியே ஃபோனை வச்சிட்டீங்க? சாப்பாடு நல்லா இல்லையா?’

ஏற்கெனவே நாள் முழுவதும் கேள்விகளின் எண்ணிக்கையால் தடுமாறிக் கொண்டிருந்த எனக்கு மனைவியின் கேள்விகள் இன்னும் எரிச்சலைக் கொடுத்தன.

‘கொஞ்சம் அமைதியா இருக்கியா தலை வலிக்குது’ என்று சற்று கோபமாகவே கத்தினேன்.

‘ஆபீஸ் கோபத்த நம்ம மேல காட்ட வேண்டியது’ என்று முணுமுணுத்துக் கொண்டே மனைவி மொபைலில் மூழ்குவதை நேரடியாகப் பார்க்காமல் தவிர்த்தேன்.

மாற்றத்தை குழந்தைகளும் புரிந்து கொண்டனர். தொந்தரவு செய்தால் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பதால் அமைதியாகத் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரவுத் தொழுகையை முடித்து விட்டு வரும் போதும் ஓர் அழைப்பு. எடுப்பதற்குள் கட் ஆனது. நான் மீண்டும் அழைக்கவில்லை.

மறுநாள் ஆபிசுக்கு ரெடியாகிவிட்டு நேற்று அழைப்பு வந்த நம்பருக்கு அழைத்தேன்.

‘சார், இப்ப வரவா?’

‘இன்னைக்கு நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன். நாளைக்குப் பார்க்கலாம்’

‘ஃபோன்லேயே விவரத்தக் கேட்க முடியாதா சார்?’

‘இல்ல கொஞ்சம் டெடெய்ல்ஸ் கேட்கணும் வேற ஒன்னுமில்ல’

முந்தைய தினத்தைப் போல் நீளாமல் உரையாடல் சுருக்கமாக முடிந்தது. எனது கேஸ் ஒன்றும் அவருக்கு அவசரமானது அல்ல என்பதை அவரின் பதில் மூலம் புரிந்து கொண்டேன். நாளை அவராக அழைத்தால் பார்த்துக் கொள்ளலாம். நாமாக அழைக்க வேண்டாம் என்று முடிவு செய்து விட்டு ஆபிசுக்குக் கிளம்பினேன்.

அன்றும் புதிய நம்பர்களில் இருந்து அழைப்புகள் வரும்போது பல்ஸ் எகிறியது. மனதில் கேள்விகள் அணிவகுத்தன. இதற்கு முன் புதிய எண்களில் இருந்து அழைப்புகள் வந்தாலும் இயல்பாக எடுத்துப் பேசிய நான், நேற்றில் இருந்து ஏன் இப்படி ஆனேன் என்பது புரியாத புதிராகவே இருந்தது.

மறுதினம் ஆபீசுக்கு ரெடியாகிக் கொண்டிருக்கும் போது ஃபோனை பார்த்துக் கொண்டே இருந்தேன். இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாத என்னை மனைவி ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டே இருந்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

நாள்கள் கடந்தன. டிபார்ட்மென்டில் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை. கிளைண்ட்களுக்கு உற்சாகத்துடன் விளக்கினேன். மதிய உணவிற்குப் பிறகு மனைவியுடன் நிதானமாகப் பேசினேன். அவளின் சமையலைப் புகழ்ந்தேன். மாலை கிளம்பும் முன் நண்பர்களுக்குப் புன்னகையுடன் விடை கொடுத்தேன். வீட்டில் குழந்தைகளுடன் விளையாடினேன்.

அலுவலகத்தில் இருக்கும் போது மீண்டும் புதிய எண்ணில் இருந்து அழைப்பு. முந்தைய பதற்றம் இல்லை என்றாலும் இதயத் துடிப்பு என் காதுக்கு கேட்டது. மீண்டும் கேள்விகளின் அணிவகுப்பு.

‘ஹலோ’

‘சார். டெலிவரி பண்ணனும். லொகேஷன் சொல்லுங்க’

லொகேஷனைச் சொல்லி விட்டு லைனை கட் செய்தாலும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குச் சில நிமிடங்கள் ஆனது.

● ஜரினா ஜமால்

# 43 அக்கரைப் பச்சை

வீடு வந்ததும் விட்ட குறை தொட்ட குறை என்பது போல் கல்யாணக் கதை தொடர்ந்தது. பீவியம்மா வருத்தப்பட்டாள். நான் செய்ய வேண்டியது கவனக் குறைவாக இருந்து விட்டேன் என்று புலம்பினாள்.

'ம்மா! அதப்பத்தி பேசாதீங்க! எனக்குக் கஷ்டமா இருக்குன்னு' அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும்முன் போதும் போதுமென்றாகிவிட்டது. இரண்டு கடிதங்கள் வந்திருந்ததைக் கொடுத்தார்கள். பிரித்துப் படிக்க நினைத்து உட்கார்ந்தாள். அதற்குள் நோக்கியா அலறியது எடுத்துப் பேசினாள்.

'அம்மி! அச்சே ஹைஹன். அம்மா நல்லாயிருக்கீங்களா?'

'நல்லா இருக்கேம்மா' அவள் குரலைக் கேட்டதும் மனமெல்லாம் குளிர்சாரல் வீசியதுபோல் இருந்தது.

'வேற பள்ளியில் சேர்ந்தாச்சாமா?'

'இல்ல மம்மி இங்க எந்தப் பள்ளிக் கூடத்திலும் சேர்க்க மாட்டாங்க. கடந்த நாள்களில் எங்கே படித்தீர்கள்? எங்கே இருந்தீர்கள்? என்று கேட்கிறார்கள்'. ஹிந்தியில் தமிழும் கலந்து சரளமாகப் பேசினாள்.

'வெளியூரில் படித்ததாகச் சொன்னால் துரத்தி விடுகிறார்கள். இங்கு வந்து எனக்கு நல்ல ஜுரம். இங்குள்ள மருத்துவ மனைகளில் முஸ்லிம்களுக்கு நல்ல கவனிப்பு கிடையாது. எங்களை எதிரிகளைப் போல பார்க்கிறார்கள்'.

ஒருவித வருத்தத்துடன் சாலிஹா கேட்டாள்,' ஏன் உங்க மேடம் உங்களை வந்து பார்க்கவில்லையா?'

'எல்லோரையும் ஓர் இடத்திற்கு வரவழைத்துப் பேசினார்கள். நாங்கள் 10, 12 பேர்கள் தான் போனோம். மற்ற சகோதரிகள் வேறு வேறு ஊர்களில் இருப்பதால் வரவில்லை. போனில் பேசிக் கொண்டார்கள்'.

'என்ன சொன்னார்கள்?'

'உங்க மம்மிக்கு சரியான அசிஸ்டன்ட் அமையவில்லை. உங்க மம்மி வருவாங்க என்றார்கள்'

சாலிஹாவுக்கு எரிச்சல் வந்தது. இந்த சைதா மேடத்திற்கு எவ்வளவு தில்லு. நான் வருவேன் என்று சொல்லி பிள்ளைகள் மனதில் நம்பிக்கையை வளர்த்துக்கிட்டு இருக்காங்க.

'நஸ்தஈன் நான் வருவது கஷ்டம் தான்'

மறுபக்கத்தில் கனத்த மவுனம்.

'நஸ்தஈன்..'

விசும்பும் குரல் கேட்டது.

'நான் என்ன சொல்லிக் கொடுத்தேன்? யார் இருந்தாலும் யார் இல்லாவிட்டாலும் கல்வியையும் தைரியத்தையும் கைவிடக் கூடாது என்று!'

'அம்மிஜான் நீங்கள் இல்லாத அந்த இடத்தை நினைத்துப் பார்க்க முடியவில்லை. நீங்கள் கொடுத்த கல்விதான் எங்களை அமைதியாக்கியது அறிவு புகட்டியது'

'நான் காந்திநகர் வந்த இந்த ஒரு மாதத்தில் உங்களை நினைக்காத நாளில்லை. எங்கள் அம்மாவின் மறு உருவமாக உங்களைப் பார்க்கிறேன். நீங்கள் வந்து விடுங்கள் அம்மி'

'உங்களுக்காக நீங்கள் கற்றுக் கொடுத்த துஆக்களை எல்லாம் செய்கிறேன்'

சின்னப் பிள்ளை என்றாலும் நிறுத்தி

நிதானமாக ஹிந்தியிலும் தமிழிலும் மாறி மாறிப் பேசினாள்.

சாலிஹாவின் கண்கள் கலங்கியது. நஸ்தஈனைப் பார்க்கும்போதெல்லாம் அவள் தன் மகளாக இருக்கக் கூடாதா? என்று ஏங்கிய நாள்கள் உண்டு. அழகும் அறிவும் இருந்தும் பெற்றோர்களை இழந்து படிக்க வேண்டும் என்பதற்காக உலக வேடிக்கை விளையாட்டுகளை எல்லாம் விட்டு விட்டு அந்த அத்துவானக் காட்டில் வந்து தங்கி இருந்தனர். வீட்டிற்கு ஆட்கள் வரும் சப்தமும் பீவி அம்மாவின் வரவேற்பும் கேட்டது.

'சரி நஸ்தஈன் நான் வைக்கிறேன்' போனை கட் பண்ணினாள்.

கையில் இருந்த கடிதங்களைப் பார்த் தாள். கடிதத்தைப் பிரிக்க நேரம் வரவில் லையோ? முன் வீட்டிற்கு வந்தால் ஆமினா அக்காவும் தங்கை சம்சு நிஹாரும் வந்திருந்தார்கள். பீவி அம்மா மகளிடம் கேட்டார். 'அக்கா வந்து எத்தனை நாளாச்சு இப்பதான் உனக்கு விசாரிக்க நேரம் வந்ததா?'

'நீங்கள் ஒருவர் போதாதாம்மா? அக்காவை தலையில் தூக்கி வைத்து ஆட! என் வீட்டுக்கா அக்கா வந்துச்சு? ஆமினா அக்கா வீட்டுக்குப் போய் இருக்கு. அவங்க மருமக வீடு போயிருக்கு. பின்ன நாத்தனார் அவங்க பிள்ளைகளைக் கொஞ்சி வந்து இருக்கு, இப்ப நான் வந்ததே அதிகம் தான்'

தங்கைக்குக் கொஞ்சம் வாய் ஜாஸ்தி. பணக்கார மாப்பிள்ளைக்கு வேறு வாழ்க்கை பெற்றதால் கொஞ்சம் பெருமை யும் அதிகம். பெற்ற தாயைப் பிறந்த பிறவிகளை வந்து பார்ப்பதில்லை. கேட் டால் குறைபாடுவது. இது நிறைய குடும் பத்தில் உள்ளது.

ஒருமுறை பட்டிமன்றத்தில் இரத்த சகோதரிகளிடம் காணப்படும் பொறாமை பற்றிப் பேசினார்கள். விட்டுக்கொடுத்து போகாத தன்மையும், மற்றவரின் உயர்வைப் பொறுத்துக் கொள்ளாத மனமும் பெண் சகோதரிகளிடமும் பொறாமை ஏற்படுகிறது. அது பலவித மான கெடுதல்களையும் செய் கிறது. 'சம்ஸ்மா உன் பிள்ளைகளுக்கு வாங்கி வந்த பொருள் எல்லாம் இருக்குமா உன் வீட்டிற்கு வரத்தான் இருந்தேன்'

'ஆமினாக்கா என்னை வந்து பார்த்த போது மனம் ரொம்ப நொந்து போய் இருந்தாங்க. அதான் அங்க போனேன்'

'சித்திமா ஊர் போனதால்தான் எனக்கு வழித் துணைக்கு ஆள் கிடைத்தது என்று நான் ஊருக்குப் போய் விட்டேன். ஊர் வந்தவுடன் உன் வீட்டிற்குத்தான் வர நினைச்சிருந்தேன். இப்பதான் வந்தேன் நீங்களும் வந்துட்டீங்க'

'என் வீட்டிலே என் பிள்ளைகளுக்கு இல்லாததா? வேற யாருக்காவது குடு!'

**சாலிஹாவின் கண்கள் கலங்கியது. நஸ்தஈனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் தன் மகளாக இருக்கக் கூடாதா? என்று ஏங்கிய நாள்கள் உண்டு.**



பீவி அம்மா அடிக்கடி சொல்வார். '10 பிள்ளைகளைப் பெற்றேன். ஐந்து தான் உலகத்துல தங்குச்சி. ஐந்தும் ஒவ்வொரு ரகம் என்று. ஆனால் தங்கை சம்சு பெய ருக்கேற்ற சூரிய காட்டம்தான்'

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் அண்ணன் தம்பிமார்களிடம் பொறாமைப் படுவார்கள் கொடுக்கல் வாங்கல் அடிப் படையில்! ஆனால் பெண் பிள்ளைகள் பொறாமைப்படுவார்களா என்பது வியப் பான விஷயமாக இருக்கிது.

மீண்டும் நோக்கியா அலறியது. பின்னால் போய் பேசினாள்.

'ஆன்ட்டி மதுரைக்கு வந்துட்டீங்களா?'

'மெட்ராசுக்கு வரும்போது எனக்கு ஒரு குருதை வாங்கி வாங்க'

'என்ன முபீன்? ரொம்ப உற்சாகமா பேசுற! குருத இல்லடி குதிரை'

'என்னமோ ஒன்னு ஆன்ட்டி. உங்க கையில வாங்கறதுல எனக்கு ஒரு மகிழ்ச்சி'

உருதும் ஆங்கிலமும் பேசும் மேடங் களோடு பழகி அவள் பேசும்போது உருது வாடையும் அடிக்கும் ஆங்கில வாடையும் அடிக்கும்.

'மரக்குதிரை வேணுமா மண் குதிரை வேணுமா?'

'அதுல எல்லாம் நீங்க வர முடியாது ஆண்ட்டி டக் டக் குதிரை வாங்கி வாங்க'

'என்ன விஷயம் உற்சாகமாக இருக் குறே!'

'உங்களுக்கு டிக்கெட் போட்டுட்டாங்க'

'ஏசி கோச்சுல குளு குளுன்னு வந்து சேருங்க.. சைதா மேடத்துட்ட நானே உங்களுக்கு அசிஸ்டன்ட்டா இருக்கிறேன் என்று சொல்லிட்டேன். எனக்கு கல் யாணமும் வேண்டாம் மாப்பிள்ளையும் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.'

'ஏண்டி அப்படிச் சொன்ன?'

'உங்க குடும்பத்துல எனக்கு மாப் பிள்ளை பாருங்க ஆன்ட்டி. நான் உங்க சொந்தக்காரர் ஆயிடுறேன்.'

'சரிதான் இங்கேயும் வந்து என்னை பாடாபடுத்தவா?'

'ஆன்ட்டி..!'

'பாவம் முபீன் என்ன நினைத்துக் கொள்வாள்? அவளைப் போல ஹெல்ப் பண்ணுகிற பெண் யாருமே இருக்க முடியாது எனக்கு'

'நான் அங்கே வரமாட்டேன் முபீன். இங்கேயே ஒரு மதரஸா திறக்கப் போகி றோம்'

'ரொம்ப நல்லதாப் போச்சு ஆன்ட்டி மேடம் எல்லோரையும் அங்கேயே கூட் டிட்டு வந்துருவாங்க..'

'கட் பண்ணுடி ஃபோன காலை யிலேயே வந்துட்டா மூச்ச தொலைக்க'

பீவி அம்மாவின் அழைப்புச் சத்தம் கேட்டது .

'சாலிஹாமா இங்க வாம்மா! உன்னப் பாக்கத் தானே தங்கச்சி வந்து இருக்கா!'

'அக்காக்கெல்லாம் நானா எப்போதும் அலட்சியம் தான்'

'அப்படியெல்லாம் சொல்லாதம்மா.. போன் வந்ததால போனா!'

ஆமினா அமைதியாக இருந்தாள். 'பெரியக்கா ஏன் எதுவும் பேச மாட்டேங் கிறீங்க'.

'நீ பேசுறல்லமா நான் கேட்டுட்டு தானே இருக்கேன்'.

'ம்மா! அக்காவுக்கு கல்யாணம் அது இதுன்னாங்களே!'

சாலிஹாவுக்கு திக் என்றது. ஒரு செய்தி எப்படி இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறது. மற்றவர்களையாவது கையில் பிடித்துக் கொள்ளலாம். இவள் என்னவெல்லாம் பேசப்போகிறாளோ தெரியவில்லையே. தடதடக்கும் மன சோடு வந்து உட்கார்ந்தாள்.

*(தொடரும்)*

# சமரசம் புதிர் போட்டி 17

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 செப்டம்பர் 15 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மது மற்றும் சூதாட்டம் (இவற்றுக்குரிய கட்டளைகள்) பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக: அவ்விரண்டிலும் பெருங்கேடு இருக்கிறது. அவற்றில் மக்களுக்கு சிறிது பயன்கள் இருப்பினும், அவற்றினால் ஏற்படும் பாவம் அவற்றின் பயனைவிட அதிகமாக இருக்கின்றது’ இந்த வசனம் இடம்பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் பகறா ஆ) அல் ஹிஜ்ர்

2. ‘மது பத்து வகைகளில் சபிக்கப்பட்டுள்ளது. மது, அதைப் பிழிபவர், யாருக்காக அது பிழியப்படுகிறதோ அவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், அதைச் சுமந்து செல்பவர், யாருக்காக அது சுமந்து செல்லப்படுகிறதோ அவர், அதன் விலையைப் பயன்படுத்துபவர், அதைக் குடிப்பவர், அதை ஊற்றிக் கொடுப்பவர் ஆகியோர் சபிக்கப்பட்டவர்கள்’ என்ற நபிமொழி இடம்பெற்றுள்ள நபிமொழித் தொகுப்பு

   அ) ஷஹீஹ் முஸ்லிம் ஆ) இப்னு மாஜா

3. அண்மையில் இறைவனிடம் மீண்ட வங்கியில் துறையில் சாதனை படைத்த இந்திய ரிசர்வ் வங்கியின் மூத்த அதிகாரி

   அ) நஜாத்துல்லாஹ் சித்தீகி
   ஆ) டாக்டர் ஜே. சதக்கத்துல்லாஹ்

4. மனித உடலில் நச்சாகக் கலந்து மனிதனைக் கொல்லும் மதுவின் முக்கிய வேதிப் பொருள்

   அ) எத்தனால் ஆ) ஓபியம்

5. இந்தியாவிலேயே முதன் முறையாக 2019 ஆம் ஆண்டு ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகச் சட்டம் இயற்றிய மாநிலம்

   அ) கர்நாடகம் ஆ) இராஜஸ்தான்

6. ஆங்கிலேயர்களை எதிர்த்து வேலூர் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்குவதற்காக ஆலோசிக்கப்பட்ட திப்புவின் புதல்வர்

   அ) ஷேக் ஆதம் ஆ) மொய்சுத்தீன்

7 ஒரு நாட்டின் பிரதமரான மோடி விடுதலை தின விழாவில் தங்கள் ஆட்சியை எதிர்த்துக் கேள்வி கேட்கும் இளைஞர்களைக் குறித்துப் பயன்படுத்திய கடும் சொல்

   அ) அர்பன் நக்சல் ஆ) திமாகி நக்சல்

8. கர்நாடக அரசு தமிழ்நாட்டின் நீர் உரிமையை வழங்குவதைத் தடுப்பதற்குக் காவிரியின் குறுக்கே கட்டவிருப்பதாகச் சொல்லும் அணை

   அ) முல்லைப் பெரியார் அணை ஆ) மேகதாது அணை

## புதிர் போட்டி பதினைந்திற்கான விடைகள்

1. ஆ) அல் கியாமா 2. ஆ) அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) 3. ஆ) தடுக்கப்பட்டவை 4. ஆ) லஹ்வ் 5. அ) றெனே லேனக் 6. அ) அவாய்ஸ் அஹமது 7. ஆ) சோனம் வாங்சுக் 8. அ) ஜி.ஆர். சுவாமிநாதன்

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. S.A. அமீர் அலீ, சிதம்பரம் 2. V.S. சம்சுத்தீன் பைஜி, கடையநல்லூர் 3. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 4. G.அன்பழகன், ஆற்காடு 5. ந.அனிபா, நாமக்கல் 6. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 7. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 8. பிர்தௌஸ், திருநெல்வேலி 9. A. பல்கீஸ் பானு அஷ்ரப்தீன், பண்டாரவாடை 10. H. முஹம்மது ஹஸன், குன்னூர் 11. T.A.அயானா, கடையநல்லூர் 12. ஜா. ஜுனைதா பேகம், பரங்கிப் பேட்டை 13. உம்மு தஸ்னீம், சோழசக்கர நல்லூர் 14. H. அஜீம், காரைக்கால் 15. G. கிருஷ்ணன், ஆற்காடு 16. A.றெஹானா பர்வீன், பொதக்குடி 17. சோழா புகழேந்தி, கரிய மாணிக்கம்

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

**உம்மு தஸ்னீம்,**
**சோழசக்கர நல்லூர்**




# நட்புக்காக நட்பு

- கவிஞர் **காசீம்**

பள்ளிப் பிள்ளைகள் நாங்கள்
பாடம் நன்றாய்ப் படிப்போம்
துள்ளி ஆடி ஓடி
சுறு சுறுப்பாய் இருப்போம்

வெள்ளம் போலக் கூடி
விளையாடி நாங்கள் மகிழ்வோம்
கில்லி, பம்பரம், கோலி விளையாட்டிலே
கிரிக்கெட்டுப் பந்தாய்ப் பறப்போம்

சடுகுடு விளையாட்டிலே
கட்டிப் பிடித்து கால் பிடித்து
நண்டு பிடி போடுவோம்
நடுக்கோட்டுக்கு விட மாட்டோம்

மான் குட்டியாய் துள்ளியே
பிடி நழுவப் பாய்ந்திடுவோம்
இளமை உடல் வாகு
விளையாட இன்பத் தேன்பாகு

விளையாட்டுத் தோழர் தோழியர்
விளையாட்டிலே விட்டுக் கொடுக்க மாட்டோம்
யார் என்ன சொன்னாலும்
நட்பில் விட்டுக் கொடுக்க மாட்டோம்

எவரும் நட்பைக் குற்றம்சாட்டினால்
நட்பே நட்புக்கு வக்காலத்து வாங்கும்
நட்புக்காகப் போராடும்
நட்பு நட்பைக் காப்பாற்றும்.


## தேனீ பூவை அடைய வழிகாட்டுங்களேன்..!




## சித்திரம் பேசுது..!




மு.சிபானா பஸ்லீம்,
அம்மாபட்டினம்,
புதுக்கோட்டை (மாவட்டம்)



F. உமர் ஷெரீஃப், 6ஆம் வகுப்பு,
செயின்ட் ஜோசப் மெட்ரிக்குலேஷன் பள்ளி,
திருப்பூர்

***அன்புச் செல்லங்களே..!*** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
*IFT லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012*

# மதங்களைக் கடந்த மாற்றுச் சிகிச்சை



இந்தியா முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பரப்புரை அதிகரித்து இந்துக்கள் முஸ்லிம்கள் இடையே பிரிவினை கூர்மையாகி வருகிறது. இந்தச் சூழலில் வெறுப்பு உற்பத்தியின் ஒரு மையமாக இருக்கும் குஜராத்தில் ஓர் இந்து ஆணுக்கு முஸ்லிம் பெண்ணும், முஸ்லிம் ஆணுக்கு இந்துப் பெண்ணும் சிறுநீரகங்களைத் தானம் செய்துள்ளனர்.

இது இந்திய அளவில் கவனம் ஈர்த்துள்ளது. இந்த நிகழ்வு 2025 ஜூலை 9 குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள ஸ்டெர்லிங் மருத்துவமனையில் நடந்துள்ளது. அகமதாபாத்தைச் சேர்ந்த 45 வயதான ஓர் இந்து ஆணும் உதய்பூரைச் சேர்ந்த 42 வயதான ஒரு முஸ்லிம் ஆணும் நாள்பட்ட இறுதி நிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இருவருக்கும் அவர்களின் எந்த உறவினரின் சிறுநீரகமும் பொருந்தாத நிலையில் இந்து ஆணின் மனைவியின் சிறுநீரகம் முஸ்லிம் ஆணுக்கும், முஸ்லிம் ஆணின் மனைவியின் சிறுநீரகம் இந்து ஆணுக்கும் பொருத்தமாக இருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

அதன் பின்னர் இரு தரப்பினரின் ஒப்புதலோடு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றி கரமாக நடந்து முடிந்தது. இது சமூக ஒற்றுமையின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுகிறது.

இந்த அறுவைச் சிகிச்சைகளை டாக்டர் சோனல் தலால், டாக்டர் ஜாவேத் வகீல், டாக்டர் கேதன் சுக்லா, டாக்டர் ஹிமான்ஷு படேல், டாக்டர் பாவின் மஹேதலியா ஆகியோர் தலைமையிலான பல்துறை மருத்துவக் குழு மேற்கொண்டது. மாற்று அறுவைச் சிகிச்சை ஒருங்கிணைப்பாளர் ரஹில் ஷாவும் வழிகாட்டுதலை வழங்கினார்.

ஸ்டெர்லிங் மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் சுதீர் மொராட், இது மருத்துவ வெற்றியைத் தாண்டிய ஒரு நிகழ்வு என்று குறிப்பிட்டார். நேரடியாக தானம் செய்ய முடியாத நோயாளிகளுக்கு கிட்னி ஸ்வாப் முறை மற்றொரு வாய்ப்பை வழங்குகிறது என்றும், இந்த நிகழ்வில் வெளிப்பட்ட கருணை, நல்லிணக்கம், பரஸ்பர நம்பிக்கை மிகவும் அர்த்தமுள்ளதாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

மத வெறுப்பை வகுப்புவாதிகள் தொடர்ந்து விதைத்தாலும் இதுபோன்ற நிகழ்வுகள் இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமையை உலகிற்கு உரத்துச் சொல்லிக் கொண்டிருக் கின்றது.

**- ரியாஸ்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 September 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

- Domestic
- International
- Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service > DOMESTIC > INTERNATIONAL > CARGO

**BUSINESS ENQUIRY :**
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

**SERVICE ENQUIRY :**
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com


If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.